417

# 60 வருஷ காங்கிரஸ்

டாக்டர்

பட்டாபி சீதாராமையா

1/46

417



V2,4 M85
N46
38661

வெளியீடு

# 60 வருஷ காங்கிரஸ்

பட்டாபி சீதாராமையா

மொழிபெயர்ப்பு
கா. திரவியம்

கதம்பம் வெளியீடு

பதிப்பு : ஜனவரி 1946

# ப தி ப் பு ரை

அறுபது வருஷங்களில் காங்கிரஸின் வளர்ச்சியைச் சுருக்கமாக இந்நூல் தமிழர்களுக்கு எடுத்து உணர்த்தும் என்பது நிச்சயம்.

இந்நூலை மொழிபெயர்த்து வெளியிட **தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி**க்கிருந்த உரிமையை அதன் தலைவர் ஸ்ரீ காமராஜ் நமக்குக் கொடுத்து உதவியதற்கும், இந்நூலை மொழிபெயர்த்துதவிய ஸ்ரீ கா. திரவியத்திற்கும் எங்கள் நன்றி.

எஸ். ஏ. ரஹீம்,
பதிப்பாசிரியர்.

விலை அணா பன்னிரண்டு

## 1. ஆரம்பப் பருவம்

இந்திய தேசிய காங்கிரஸின் சரித்திரம் உண்மையில் நவஇந்தியாவின் சரித்திரமும், அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற நாடு நடத்தும் போராட்டத்தின் வரலாறுமேயாகும். சுயாட்சி பெற்ற நாடுகளிலேயே, மக்கள் தங்கள் சுதந்திரத்தை மிகுந்த சிரத்தையுடன் பேணி காத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. உரிமைகளைக் காத்துக்கொள்ள அவர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்குக் கிளர்ச்சி என்று நடை முறையில் சொல்வதுண்டு. மிதமான கிளர்ச்சி மூன்று வகைகளில் நடைபெறும். மனுக்களும் மகஜர்களும் அனுப்பி நமது கோரிக்கையை வற்புறுத்தலாம்; அல்லது மன்றாடிக் கேட்டுக்கொள்ளலாம்; அல்லது ஆக்ஷேபம் எழுப்பிக் கண்டனம் செய்யலாம். இத்தகைய மிதமான கிளர்ச்சி பத்திரிகை மூலமாகவும், பிரசங்கங்கள் மூல்மாகவும், கடிதப் போக்குவரத்து, பிரசுரம் மூலமாகவும் பரவும். இக்கிளர்ச்சி மூலம், அதிகாரத்திலுள்ளவர்கள் பொதுமக்கள் மனத்தை அறிந்து, அவர்கள் ஒருமுகப்பட்ட கோரிக்கையின் பயனாய் ஏற்பட்ட எழுச்சிக்கு ஆதரவாய் நடந்து கொள்ளக் கூடும். கிளர்ச்சியிலிருந்தே அரசியல் உருவாகுகிறது; இன்றைய அரசியலே நாளை சரித்திரமாக விளங்குகிறது. காங்கிரஸ் கிளர்ச்சி செய்யும் ஒரு ஸ்தாபன மென்றும், ராஜத்துவேஷத்தைப் பரப்பும் ஒரு ஸ்தாபனமென்றும் பல்வேறுவகையாக, ஆங்கிலோ-

இந்திய நவாப்களும் அதிகார வர்க்கத்தினரும் கூறி யுள்ளனர். 1885-ம் வருஷத்தில், வைஸ்ராய் டப்ரீன் பிரபுவின் தூண்டுதலின்பேரில் ஐ. ஸி. எஸ். பதவியி லிருந்து விலகியிருந்த ஏ. ஓ. ஹ்யூம் என்ற அதிகாரி யின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனம் காங்கிரஸ் என்றபோதிலும், அது கிளர்ச்சி செய்யும் ஸ்தாபனம் என்பதும் ராஜத் துவேஷத்தைப் பரப்பும் ஸ்தாபன மென்பதும் ஓரளவிற்கு உண்மைதான்.

காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்த நிலை மையை நாம் முதலில தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு நூற்றுண்டாக வர்த்தக, அரசியல் துறைகளில் ஈடு பட்டு, கிழக்கிந்திய கம்பெனி பல விசாலமான பிர தேசங்களைத் தன் வசப்படுத்தி, ராஜ்ய பரிபாலன உரிமைகளைப் பெற்றிருந்தது. 1772க்குப் பின் கம்பெனி யின் நடவடிக்கைகளை பார்லிமெண்ட் அவ்வப்போது கண்காணித்து வந்தது. கம்பெனியின் நிர்வாகத்தி லிருந்த குறைபாடுகள் பார்லிமெண்டின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு தீர்க்கப்பட்டன.

கம்பெனியின் ஏஜண்டுகள் செய்திருந்த சில ஊழல் களை, பர்க், ஷெரிடன், பாக்ஸ் போன்றவர்கள் இங்கி லாந்து பொதுமக்கள் கவனத்துக்குக் கொண்டு வந் திருந்தனர். முதல் வைஸ்ராயான வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபுக்கள் சபை முன் விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டார். கம்பெனி ஏஜெண்டுகள் இந்தியாவில் மேலும் அதிக பிரதேசங்களை வசப்படுத்த முயற்சிக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டது. ஆயினும் காலத் தின் போக்கை யார் வெல்லமுடியும்? 1773ல் கண் காணிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கம்பெனி யின் டைரக்டர்கள் போர்டுக்கும் கவர்னர்-ஜெனரலுக்

கும் மேலாக ஒரு கட்டுப்பாடு போர்ட் 1784-ல் ஏற் படுத்தப்பட்டது. ஏற்கெனவே கம்பெனி வசமிருந்த பிர தேசங்களின் நிர்வாகப் பொறுப்பை, முதன் முறையாக பார்லிமெண்டே ஏற்றுக்கொண்டது. கிழக்கிந்திய கம் பெனியின் சாசனம் 20 வருஷங்களுக் கொருமுறை ஊர் ஜிதம் செய்யபட்டபோது, ஒவ்வொரு முறையும் கம் பெனியின் நிர்வாகத்தைப் பற்றி விசாரணை நடந்தது. 1793, 1813, 1833, 1853 ஆகிய வருஷங்களில் இத் தகைய விசாரணை நடந்தது. " இப் பிரதேசங்களில் வசிக்கும் பூர்வ குடிகளிலோ, பிரஜைகளிலோ யாரும், தங்கள் மதம், பிறப்பிடம், நிறம், ஆகிய காரணங்களால் மட்டும், கம்பெனியில் எவ்வித உத்தியோகமும் பதவி யும் வகிக்கத் தடை செய்யப்பட முடியாது " என்று 1833-ம் வருஷச் சட்டம் கூறியது பிரிட்டிஷ் இந்தியா வில் ஆளும் வர்க்கம் என்று பிரத்தியேகமாக எதுவு மிருக்காதென்றும், இனமோ மதமோ போக்ய தாம்சமாக மதிக்கப் படாதென்றும், வேலைக்கு மற்ற வழிகளில் அருகதையான எப்பிரஜையும், அவர் இந் தியர், அல்லது ஆங்கிலேயர், அல்லது ஆங்கிலோ இந்தியர் ஆயினும் சரி, அவ்வேலையை அடைவதற்குத் தடை விதிக்கப்படமாட்டாதென்றும் அந்த சாசனத்துக்கு வியாக்கியானம் செய்யப்பட்டது. இந்தியாவில் வியா பாரம் செய்ய கம்பெனிக்கு இருந்த அதிகாரத்தையும் இச் சட்டம் போக்கியது. இதன்படி அக் கம்பெனி வியாபாரம் நடத்தும் ஒரு ஸ்தாபனம் என்பது போய், பூர்ண ராஜ்யபரிபாலன உரிமை கொண்ட ஒரு சபை யாகிவிட்டது. இக் காலத்தில் ஆங்கில கல்வியைப் புகுத்துவது பற்றியும் ஒரு சர்ச்சை எழுந்தது. இறுதி யில் ஆங்கிலக் கல்விக்குச் சாதகமாகவும், இந்திய

மொழிகள், இலக்கியம் ஆகியவற்றிற்குப் பிரதிகூல மாகவும் முடிவு செய்யப்பட்டது. இம் முடிவுக்கு ஆதரவாயிருந்தவர்களில் மெக்காலேயும் ராஜாராம் மோஹன்ராயும் முக்கியமானவர்கள்.

கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவின் பல்வேறு பாகங்களேயும் எப்படி வசப்படுத்தியது என்பது பற்றிய விவரங்களே இங்கு தர அவசியமில்லே. 1833-53க்கிடை யில், பஞ்சாபும் சிந்துவும் இறுதியாக ஆக்ரமிக்கப்பட் டன. இன்று பிரிட்டிஷ் மாகாணங்களாக அமைந் துள்ள பிரதேசம், 562 சுதேச சமஸ்தான பிரதேசங் களிலிருந்து பிரிந்து தனித்திலங்கியது. ஒரு மன்னர் வாரிசு இன்றி இறந்தால், அவர் விதவைக்கு ஸ்வீகார உரிமை தராமல் அந்த சமஸ்தானத்தை பிரிட்டிஷ் ராஜ் யத்துடன் இணைத்துக் கொள்ளும் கொள்கையைப் பின்பற்றி வந்தார் டால்ஹௌஸி பிரபு. இதனுல் சுதேச மன்னர்களிடை மிகுந்த அதிருப்தி ஏற்பட்டது; அவர்களுடன் சிப்பாய்கள் சேர்ந்து கொண்டனர். இதன் பயனுய் ஏற்பட்ட எழுச்சி 1857 சிப்பாய் கலகம் என்று கூறப்படுகிறது. ஆனுல் உண்மையில், அது இந்தியாவை அன்னியர் கையிலிருந்து விடுவிக்க நடந்த ராணுவ எழுச்சி - சுதந்திரப் புரட்சியே - யாகும். இப் புரட்சியிலிருந்து பிரிட்டிஷார் ஒரு படிப்பினே கற்றுக் கொண்டு, இந்திய மக்களிடை பிரிட்டிஷ் நாகரிகம், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை முதலியவற்றைப் புகுத்திப் பரப்புவதன் உடனடியான அவசியத்தை உணர்ந்தனர். இந்திய மக்களே ஓரளவுக்கு வசியப்படுத் திக்கொள்ளாமல் அவர்களே ஆள்வது சாத்தியமில்லே யென்பதை அவர்கள் உணர்ந்தனர். ஆகவே தங்கள் ஆங்கிலக் கல்விமுறை, வாழ்க்கை முறை, பழக்கங்கள்,

முதலியவற்றை இந்தியர்களிடை புகுத்த அவர்கள் முற்பட்டனர். பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் திறந்து, அவற்றில் ஆங்கிலமொழி, இலக்கியம், ஆங்கிலேயே சரித்திரம், சட்ட சாஸ்திரம் முதலியவற்றிற்கு முக்யத்துவம் தந்தால்தான் இது சாத்தியமாகும் என்பதை அவர்கள் அறிந்தனர். வெகு விரைவில் இந்தியர்களும் இக் கல்விமுறையில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சியடைந்து, பல உயர்ந்த உத்தியோகங்களையும் பொறுப்புகளையும் ஏற்றுத் திறம்பட வகித்தனர். தங்களுக்கு இத்தகைய கௌரவமும் பதவிகளும் தந்தருளிய பிரிட்டிஷ் சர்க்காரிடம் அவர்கள் நன்றி பாராட்டி, அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கத் தொடங்கினர். புரட்சி நடந்த மறு வருஷத்திலேயே, அதாவது 1858ல் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் சர்வகலாசாலைகள் நிறுவப்பட்டன.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசத்தைப் போதித்துப் புகட்டிய கலாசாலைகள், கோர்டுகள், சட்டசபைகள், ஆகியவற்றைத்தான் பகிஷ்கரிக்க வேண்டுமென்று 1921ல் இந்திய சத்யாக்ரஹிகள் ஒரு தீவிர இயக்கம் தொடங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கல்வித்துறையில் ஏற்பட்டிருந்த அபிவிருத்தியுடன், ஓரளவிற்கு அரசியல் உணர்வும் ஏற்பட்டிருந்தது. இதன் சின்னமாக 1851ல் வங்காளத்தில், பிரிட்டிஷ் இந்திய சங்கம் நிறுவப்பட்டது. பம்பாயில் தாதாபாய் நௌரோஜி, ஜகன்னாத ஷங்கர் சேத் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்ட பம்பாய் சங்கம் பொதுஜன ஊழியம் செய்துவந்தது. 1870-80 வருஷங்களுக்கிடையில் இச் சங்கம் போய், கிழக்கிந்திய சங்கம் என்று ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. தென்

னிந்தியாவிலோ, முதலில் வாரப்பத்திரிகையாக ஆரம்பித்துப் பின்னர் தினசரியாகிய 'ஹிந்து' பொதுஜன உணர்ச்சியை தீவிரமாக வெளியிட்டு வந்தது. 1876-ல் வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய சங்கம், சுரேந்திரநாத் பானர்ஜி, ஆனந்த மோஹன் போஸ் ஆகியோர் தலைமையில் சிறந்த முறையில் நடந்து வந்தது. 1885 வாக்கில், ஏறக்குறைய 475 பத்திரிகைகள் தோன்றியிருந்தன. இவர்களிற் பெரும்பான்மையானவை தாய்மொழிப் பத்திரிகைகள். பொதுஜன உணர்ச்சியை இப் பத்திரிகைகள் தீவிரமாக வெளியிட்டு வந்ததைத் தடை செய்ய விரும்பிய லிட்டன் பிரபு, 1878-ம் வருஷத்திய தாய்மொழிப் பத்திரிகைகள் சட்டம், ஆயுதங்கள் சட்டம் ஆகிய அடக்குமுறைச் சட்டங்களை அமலில் கொண்டுவந்தார். 1887-ல். சென்னை மஹாஜன சபை அமைக்கப்பட்டது.

இந்த அரசியல் முன்னேற்றத்திற்கு ஏற்றாற்போல, சமூக சட்டங்களிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டுவந்தது. 1856-ம் வருஷத்திய ஹிந்து விதவைகள் மறுமணச் சட்டம், சட்டப்படி பதிவு செய்யும் கல்யாண முறைச் சட்டம் (1872) ஆகியவை முக்கியமானவை. 14 வயதுக்குக் குறைந்த பெண்களுக்குக் கல்யாணம் செய்விக்கக் கூடாதென்று சட்டமியற்ற 1872-ல் ஒரு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது வெற்றிபெறவில்லை. இச் சீர்திருத்தங்களுக்கு முக்கிய காரணமாக இருந்தது பிரம்ம சமாஜம். இந்த சமாஜம் ராஜாராம் மோஹன்ராயால் நிறுவப்பட்டு, கேஷுப் சந்திரசென், ஆனந்த மோஹன் போஸ் ஆகியோர் தலைமையில் வளர்ந்தது. பம்பாயில் இந்த இயக்கம், பிரார்த்தனை சமாஜம் என்ற ஸ்தாபனத்தில் உருவெடுத்தது. இந்த

சமாஜம் நீதிபதி ரானடேயால் நிறுவப்பட்டது. ஆங்கிலக் கல்வியால் நாட்டுக்கு விரைவில் ஏற்பட விருந்த நாசத்தையும் தேசிய சீரழிவையும் தடுக்கும் நோக்கத்துடன் சுவாமி தயானந்த சரஸ்வதியின் தலைமையில் ஆரியசமாஜம் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வாறு பல துறைகளிலும் பலவகைகளில் நாடு முன்னேறிய போதும், பொதுமக்கள் குறைகளும், அக் குறைகளின் பயனாய் அவர்களிடை ஏற்பட்டிருந்த அதிருப்தியும் மனக் கசப்பும் தீரவில்லை. இக் குறைகளை நிவர்த்திசெய்துகொள்ள, பல ரகசிய சங்கங்கள், தேச மெங்கிலும், குறிப்பாக ஐக்ய மாகாணத்திலும், எழுந் தன. இச் சங்கங்கள் பலாத்கார வழியைப் பின்பற்றி, 1857-ல் நடந்த புரட்சிபோல் மற்றொரு புரட்சி நடத்தும் நோக்கத்துடன் வேலை செய்தன. மக்களிடை ஏற்பட்டிருந்த மனக் கசப்பின் காரணமாய் அவர்க ளிடை ரகசிய இயக்கம் எழுந்து வந்ததை ஏ. ஓ. ஹ்யூமும் கண்டார். பல்வேறு ஜில்லாக்களிலும் மூண்டுவந்த இப்புரட்சி இயக்கம்பற்றிய தகவல்கள் அடங்கிய ஏழு அறிக்கைகள் அவர் கைக்கு வந்தன. மதாசாரியர்களுக்கும் குருக்களுக்கும் அவர்கள் சீடர்கள் அனுப்பியிருந்த தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை கள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஜில்லா, ஜில்லாவின் உட் - பிரிவு, நகரம், என்று கிரமப்படி இந்த அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு அமைக்கப்பட் டிருந்தன. "திடீரென ஒரு பலாத்கார எழுச்சி பற்றிக் கொள்ள வேண்டும். இங்குமங்கும் கலகம் நடக்க வேண்டும். பிரதிகூலமான பேர்வழிகளைக் கொலை செய்யவேண்டும். பாங்க் முதலாளிகளையும் அவர்கள் கடைகளையும் கொள்ளையடிக்க வேண்டும். இவ்வாறு

சட்ட விரோதமான செயல்களின் பயனாய் திரளும் சக்தியிலிருந்து மகத்தான தேசிய புரட்சி ஏற்படுவது திண்ணம்" என்று அவர்கள் உத்தேசித்திருந்தார்கள். 1870 வா.க்கில் இந்த ரகசிய சங்கங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இந்த அபாயத்தை ஆங்கிலேய அதிகாரிகள் உணர்ந்தனர். மக்கள் உணர்ச்சி இத்தகைய அபாயகர மான வழிகளில் பாயாமல் தடுப்பதற்கு ஒரு அகில இந்திய ஸ்தாபனம் அமைப்பது பொதுஜன அமைதிக்கு அவசியம் என்பது டப்ரீன் பிரபு வைஸ்ராயா யிருந்த காலத்தில் தெளிவாகியது. இத்தகைய ஸ்தாபனம் ஒன்றை, ஏ. ஓ. ஹ்யூம் உதவிகொண்டு ஏற்படுத்துவ தென்று 1885 மார்ச்சில் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனமே பின்னால் இந்திய தேசிய காங்கிரஸ் என்று பெயர் பெற்றது.

## 2. சீர்திருத்தப் பருவம்

காங்கிரஸின் சரித்திரத்தை பல்வேறு பருவங் களாகப் பிரிக்கலாம். முதலாவது சீர்திருத்தப் பருவம் எனலாம்; 1885-1905 வருஷங்களுக்குள் அது அடங்கி யது. இக் காலத்தில், இந்தியாவின் அரசியல் அபி லாஷைகள் பற்றியும் இறுதி லக்ஷியம் பற்றியும் ஒரு வகையான உணர்வு ஏற்பட்டிருந்தபோதிலும், அன்றாட நிர்வாகத்தில் ஏற்பட்ட நேரடியான குறைகளை உடனடி யாகத் தீர்த்துக் கொள்வதிலேயே மக்கள் பொதுவாக மிகுந்த சிரத்தை கொண்டிருந்தனர். அப்போது நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களில் அநேகமாய் எல்லாம், இக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று வற்புறுத்திய தீர்மானங்களாகவே இருந்தன. நாட்டின்

நிர்மாண வேலைகளுக்கும் ஆக்கல் சக்தி அபிவிருத்திக்கும் அனுகூலமாக நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று சர்க்காரிடம் கேட்டுக்கொள்ளப் பட்டது. பிரசாரம் செய்து பொதுஜன உணர்வைத் திரட்டுவது இந்த இயக்கத்தில் முக்கியமாக இருந்தது.

காங்கிரஸின் ஆதரவில் 'இந்தியா' என்ற ஒரு வாரப் பத்திரிகை இங்கிலாந்தில் பிரசுரமாகி வந்தது. அதைக் கொஞ்ச பேரே வாங்கினார்களெனினும், இந்தியா சம்பந்தமான விவகாரங்களில் பிரிட்டிஷ் மக்கள் உணர்வை எழுப்பி, திரட்டுவதற்கு இது ஒரு தூண்டுகோலாக விருந்தது. 1892-ம் வருஷத்திய சீர் திருத்தச் சட்டப்படி, பம்பாய், சென்னை, கல்கத்தா சட்டசபைகளில், முதன் முறையாக, தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் 6, அல்லது 7 பேருக்கு இடம் தரப் பட்டது. பொதுஜன உணர்ச்சியையும் மக்கள் குறைகளையும் எடுத்துரைக்க இதுவும் ஒரு வாய்ப்பு அளித்தது. ஆயினும் பட்ஜெட் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது விவாதத்தில் கலந்துகொள்வதற்கும், சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து எழுந்த கேள்விகள் கேட்பதற்குமே இந்த அங்கத்தினர்களுக்கு உரிமை யிருந்தது.

அக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் தீர்மானங்கள் எல்லாவற்றிலும், ராஜ விசுவாசமும், பிரிட்டிஷ் மக்களிடை நல்லுணர்வும் நிறைந்திருந்தன. அரசர், அல்லது அரசி பிறந்த தினத்தன்று வாழ்த்து அனுப்பப்பட்டது ; நீதி செலுத்தும் முறை வெகுவாகப் போற்றப்பட்டது. மேலும் சில குறைகளை, தயவு கூர்ந்து, நிவர்த்திக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளப்பட்டது. செம்மையான ஆட்சி

வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்களே யொழிய, சுயாட்சி பற்றிய கருத்து அவ்வளவாகவில்லை. ஆங்கிலத்தில் தான் பிரசங்கங்கள் நடந்தன; அழகான ஆங்கிலப் பிரசங்கம் செய்வதே சிறந்த தேசாபிமானியின் லக்ஷணம் என்று மதிக்கப்பட்டது. காங்கிரசும் அதன் வருடாந்திர மகா நாடுகளும், அரசியல் ஆற்றலையும் சொற்பொழிவு செய்யும் திறமையையும் வெளிப்படுத்த ஒரு வாய்ப்பளித்தன. இத் திறமையை சர்க்காரும் கண்டு மதித்து, வெகுமதி யளிக்கும் நோக்கத்துடன், அறிவும் ஆற்றலும் பொருந்திய ஒரு சில இந்தியரைத் தேர்ந்தெடுத்து, இந்திய ஹைகோர்ட் நீதிபதிகள் பதவிக்கும் பின்னர் ஜில்லா நீதிபதி, கீழ்த்தர நீதிபதி பதவிகளுக்கும் நியமித்தது. தாங்கள் நினைத்தபடி, பொது ஜன உணர்ச்சி அபாயகரமான வழிகளில் பாயாமல் தடுப்பதற்கு ஒரு சாதானமாக மட்டும் இராமல், காங்கிரஸ் பெரிய ஸ்தாபனமாக வளர்ந்து கொண்டிருந்தது என்பதையும் ராஜத் துவேஷத்தைப் பரப்பும் ஒரு ஸ்தாபனமாக ஆகக் கூடும் என்பதையும் சர்க்கார் உணர்ந்து அஞ்சினர். ஆகவே 1888-ம் ஆண்டு வாக்கிலேயே, காங்கிரஸின் வளர்ச்சியை சர்க்கார் அச்சத்துடனும் அவநம்பிக்கையுடனும் நோக்கி வந்தனர். அதிலும் குறிப்பாக 1898-99லிருந்து 1905 வரை வைஸ்ராயாக விருந்த கர்ஸன் பிரபு, தேசம் ஒன்றுபட்டு, முழுச் சக்தியைத் திரட்டுவதன் அபாயத்தை உணர்ந்து, வங்காளத்தை இரண்டு பாகங்களாகப் பிரிவினை செய்யத் தீர்மானித்தார். ஒரு பாகத்தில் முஸ்லிம் செல்வாக்கை ஸ்திரப்படுத்தி அதைப் பலப்படுத்த சர்க்கார் விரும்பினர். அக் காலத்தில், தேசிய தன்மதிப்பும், சுதந்திர உணர்ச்சியும்

கொண்டு, கலாசார அபிவிருத்தியிலும் தலைமை ஸ்தானம் வகித்துவந்த மாகாணம் வங்காளமாதலால், அதைப் பிரித்துக் கலைத்துவிட வேண்டுமென்று கர்ஸன் சிரத்தை கொண்டார்.

## 3. குடியேற்ற சுயாட்சிப் பருவம்

வங்காளப் பிரிவினையுடன் காங்கிரஸ் சரித்திரத்தில் இரண்டாவது பருவம் ஆரம்பமாயிற்று. குடியேற்ற நாட்டு அந்தஸ்தில் சுயாட்சிபெற விரும்பிக் கிளர்ச்சி நடந்த பருவமிது. 1905 அக். 16ந் தேதி செய்யப்பட்ட வங்காளப் பிரிவினை, தேசத்தில் மறைந்து பதுங்கிக் கிடந்த சுயமரியாதையைத் தட்டி எழுப்பியது. இந்தியாவில் உருவாகி வந்த ஐக்கியத்துக்கு முட்டுக்கட்டை போடும் நோக்கத்துடன், தந்திரம் மிகுந்த வைஸ்ராயால் புகுத்தப்பட்ட இப்பிரிவினையைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்ய, எல்லா மாகாணங்களும் வங்காளத்துக்கு ஆதரவாய்த் திரண்டன. செம்மையான ஆட்சியாக விருந்தாலும் சுயாட்சிக்கு ஈடாகாது என்று பிரிட்டனின் மிதவாத பிரதமராகிய ஸர். ஹென்ரி காம்ப்பெல் கூறியிருந்தார். இவ்வாக்கியத்தின் உண்மையை காங்கிரஸ் உணர்ந்தது. கல்கத்தாவில் 1906-ம் வருஷத்தில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டில் சுதேசி, பகிஷ்காரம், தேசிய கல்வி, சுயராஜ்யம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட முற்போக்குத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்பயனாய் காங்கிரஸில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன.

1906-ம் ஆண்டு மகாநாட்டிற்கு தாதாபாய் நௌரோஜி தலைமை வகித்தார். காங்கிரஸ் தலைவர் ஆசனத்தில் மூன்று முறை வீற்றிருக்கும் பேறு பெற்ற

வர் அப்பெரியார். காங்கிரஸின் நடவடிக்கைகளில் முதன் முதலாக, அதிகாரபூர்வமாக, சுயராஜ்யம் என்ற வார்த்தையை வழக்கில் கொண்டுவந்தவர் அவர் தான். அன்று புகுந்த அச்சொல் இன்றுவரை ஆட்சி செலுத்துகிறது. லங்காஷையர் துணி இந்தியாவுக்குள் புகுத்தப்பட்ட ஒரு நூற்றுண்டுக்குப் பின் இப்புதுத் திட்டத்தால் கைத்தறித் துணி உற்பத்தி மீண்டும் தழைத்தோங்கலாயிற்று. கைத்தறிகள் விரைவில் யந்திரத் தறிகளாகின. லங்காஷையர் துணியை பகிஷ்கரித்து விட்டு கைத்தறித் துணியையும், இந்தியாவில் செய்யப்பட்ட கம்பளி ஆடைகளையும் அணிந்து கொள்வதே உண்மையான காங்கிரஸ் வாதிகளுக்கும் தேசபிமானிகளுக்கும் அழகாயிற்று. இப்பகிஷ்காரத் திட்டம் விரைவில் கல்வி, நிர்வாகத் துறைகளிலும் பரவி, பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் தழுவியது. இதன் பயனுய், தேசியக் கல்வியைப் புகட்ட நாடெங்கும் சங்கங்களும் தேசிய பள்ளிக்கூடங்களும் எழுந்தன. வங்காளத்தில் ஸர் குருதாஸ் பானர்ஜி, அரவிந்த கோஷ், சதீஷ் சந்திர முக்கர்ஜி ஆகியோர் வழிகாட்டினுர்கள்.

நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆர்வக் கனலை மூட்டிய பாபு பெபின் சந்திரபாலின் வீர வாசகங்களிலிருந்து உணர்வு பெற்றதன் பறனுய், தெற்கில் 1908-ம் ஆண்டில் ஆந்திர ஜாதீய பாரிஷாத் நிறுவப்பட்டது. டெக்கான் கல்வி சங்கத்தில் 20 ஆண்டுகளாக அங்கத்தினராகவிருந்த கோபால கிருஷ்ண கோகலே 1905-ல் காசியில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1902லிருந்து சட்டசபையில் பட்ஜெட்டை தாக்கிப் பிரசங்கங்கள் செய்து, கர்ஸன் பிரபு போன்றவர்களின் பாராட்டையும் பெற்

திருந்த கோகலேயின் புகழுக்கு இத்தலைமைப் பதவி புதுசோதி அளித்தது. நாடெங்கும் தீவிர எழுச்சி ஏற்பட்டு, புரட்சி வேகம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. நிதானமாக, திரை மறைவில் வேலைசெய்து கொண்டிருந்த மிதவாத சக்திகள், காங்கிரஸை தீவிரவாதிகள் கைப்பற்றிக் கொள்ளக் கூடும் என்று உணர்ந்தனர். 1907ல் காங்கிரஸ், தீவிரவாதம் மிகுந்த இடமான நாகபுரியில் கூடுவதென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வருஷக் கடைசியில், மகாநாட்டு இடம் சூரத்துக்கு மாற்றப்பட்டது.

பம்பாய் சட்ட நிபுண சிங்கமும், மிகப் பிரபல மிதவாதியுமான ஸர் பெரோஸ் ஷா மேத்தா நிலைமையைச் சமாளிக்க முன்வந்தார். எதற்கும் தளராத லோகமான்யதிலகர், மிதவாதிகள் முன்னணியைத் தீவிரமாக எதிர்த்துப் போராடினர். சூரத் மகாநாடு முறியடிக்கப்பட்டது. அந்த முறிவின் பயனாய் 1908 ஏப்ரலில் அலஹாபாத்தில் தேசிய சம்மேளனம் எழுந்தது. இது காங்கிரஸுக்கு ஒரு மிதவாத திட்டத்தையும் விதிகளையும் வகுத்தது. 1908ல் காங்கிரஸ் வருடாந்திர மகாநாடு சென்னையில், கவர்னராகவிருந்த ஸர் ஆர்தர் லாலி ஆதரவில் கூடியது. 1915ல் அப்பொழுது அதிமிதவாதியாகவிருந்த ஸ்ரீசத்யேந்திர பிரஸன்ன சின்ஹா தலைமையில் கூடியது. இதற்கிடையில் காங்கிரஸில் மீண்டும் மிதவாத சக்திகள் செல்வாக்கு பெற்று, ராஜ விசுவாசம், சர்க்காருக்கு மகஜர், பிரிட்டிஷ் மக்களுக்கு விண்ணப்பம், இந்திய அதிகார வர்க்கத்தின் செய்கைகளுக்கு ஆக்ஷேபம், ஆகிய முறைகளில் வேலை நடத்தி வந்தன. தீவிர தேசியவாதிகள் சார்க்காரின் அடக்குமுறை வேட்டைக்குப் பலியாயினர். லோகமான்ய திலகர் ராஜத்துவேஷ

குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு, 6 வருஷ தண்டனை விதிக்கப்பட்டு மாண்டலேக்கு அழைத்துச் செல்லப்பட்டார். 1908ல் திலகர் கைது செய்யப்பட்டபோது, மிதவாதிகள் சர்க்கார் பக்கத்தில் சேர்ந்துகொண்டனர். அப்பொழுது ஜான் மார்லி இந்தியா மந்திரியாக இருந்து வந்தார். வைஸ்ராய் நிர்வாகக் கவுன்ஸிலுக்கு சத்யேந்திர ப்ரஸன்ன சின்ஹாவையும், பம்பாய், சென்னை, நிர்வாகக் கவுன்ஸில்களுக்கு இரண்டு இந்தியர்களையும் சர்க்கார் நியமித்ததே இந்த மிதவாதக் கொள்கைக்கு வெகுமதியாய்க் கிடைத்தது. உயர்ந்த உத்தியோகங்கள் வகிக்க இந்தியர் அருகதையற்றவர் என்று 1907 ஜூன் மாதத்தில் தான் ஜான் மார்லி கூறியிருந்தார். இதற்கிடையில் இந்திய அரசியலிலேயே துரதிருஷ்ட சம்பவமொன்று நடந்தது. 1908 ஏப்ரல் 30ந் தேதி யன்று முஸாபர்பூர் ஜில்லா நீதிபதிக்கென்று தயார் செய்து வைக்கப்பட்டிருந்த குண்டு, ஸ்ரீமதி கென்னடி, அவர் புத்திரி, ஆகிய இரு நிரபராதிகளான பெண்மணிகள் மீது வீசப்பட்டது.

## 4. ஹோம்ரூல் பருவம்

1915-ம் வருஷம் பிப்ரவரி 15ந் தேதி, இந்தியாவின் சிறந்த அறிவாளியும் அரசியல் வாதியுமான கோபால கிருஷ்ண கோகலே காலமானார். அவ்வருஷம் நவம்பரில் ஸர் பெரோஸ் ஷா மேத்தா காலமானார். 1914 ஜூன் மாதக் கடைசியில் திலகர் விடுதலையடைந்தார். 1914 ஆகஸ்டு 4ந் தேதி உலக மகாயுத்தம் தொடங்கியது. இதன் பயனாய் தேசிய உணர்வு தட்டி எழுப்பப் பட்டது. இந்தியாவின் சுயாட்சிக் கிளர்ச்சிக்குத்

தலைமை ஸ்தானம் திலகரிடம் சென்றது. அக்காலம் வரை, பிரம்மஞான இயக்கத்திலேயே ஈடுபட்டு அரசியலில் நேரடியாகக் கலந்து கொள்ளாமலிருந்த பெஸண்ட் அம்மையார், திடீரென அரசியல் அரங்கத்தில் குதித்து 'ஹோம்ரூல்' என்ற புது கோஷத்தை எழுப்பி, அதைப் பின்பற்றித் தீவிரமான, ஆவேசமான கிளர்ச்சியொன்று நடத்தினர். குடியேற்ற நாட்டு சுயாட்சி என்று 1908ல் வழங்கி வந்த கோஷம்போய் ஹோம்ரூல் என்ற புது கோஷம் முழங்கியது. 1915-17 வருஷங்களில் தேசமெங்கும் ஏற்பட்ட மகத்தான எழுச்சியில் ஹோம்ரூல் என்ற போர் முரசு கொட்டப்பட்டது.

1916ல் லக்ஷ்மணபுரியில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டின் மூலம் இந்திய அரசியலில் திலகர் மீண்டும் பிரவேசித்தார். அதன் பயனாய், தீவிர வாதிகளும் மிதவாதிகளும் ஒரு கட்சியாக இணைந்தனர். இவ்வாறு ஒன்றுபட்ட தேசிய கட்சி, 'ஹோம்ரூல்' ஸ்தாபிக்கப் போராடியது. லக்ஷ்மணபுரி மகாநாட்டுடன், காங்கிரஸ் சரித்திரத்தில் ஒரு புதுபருவம் ஆரம்பமாயிற்று. சுதேசி, பகிஷ்காரம், தேசிய கல்வி, ஹோம்ரூல் ஆகிய நான்கும் காங்கிரஸின் கோஷங்களாயின. மஹாராஷ்டிரத்தில் திலகராலும், இந்தியா முழுவதும் அன்னிபெஸண்ட் அம்மையாராலும். ஆரம்பிக்கப்பட்ட இந்த ஹோம்ரூல் இயக்கத்தின் காரணமாய் இந்திய அரசியலுக்கு ஒரு வேகம் பிறந்தது. 1917 ஜூன் மாதத்தில், உதகமண்டலத்தை விட்டு வெளியேறக்கூடாது என்று அம்மையார் மீது தடை உத்தரவு விதிக்கப்பட்டது. இதனாலும், உலக யுத்தத்தில் மெஸொபொடோமியா ஊழல் காமன்ஸ் சபையில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்தும், இங்கிலாந்தில் எட்வின் சாமுவேல் மான்டேகு

செல்வாக்கு அதிகரித்தது. "இந்திய சர்க்கார் ஒரு மரக் கட்டை போன்றது ; வளைந்து கொடுக்க வகையற்றது; காலத்துக்கு ஒவ்வாத கர்னாடக சபை" யென்று மான் டேகு, காமன்ஸ் சபையில் தாக்கிப் பேசினார். இதன் பயனாக இந்தியா மந்திரியாகவிருந்த ஆஸ்டென் சேம் பர்லேன் ராஜிநாமா செய்தார். அந்த ஸ்தானத்திற்கு மானடேகு வந்தார். பொறுப்பேற்றவுடன் 1917 ஆகஸ்ட் 20ல் இந்தியாவிற்குப் படிப்படியாக பொறுப் பாட்சி வழங்குவது சம்பந்தமாக அவர் செய்த பிரகட னம் இன்று சரித்திரப் பிரசித்தி பெற்றதாகிவிட்டது.

1917 நவம்பரில் மான்டேகு இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவர் வருவதற்கு முன்பாக, 1917 செப்டம் பர் நடுவில் பெஸண்ட் அம்மையார்மீதும் அவர் சகாக் கள்மீதுமிருந்த தடையுத்தரவுகள் நீக்கப்பட்டன. பொறுப்பாட்சி யென்பது உண்மையில் பிரிட்டனில் வழங்கிவரும் ஆட்சிக்குச் சமமே என்று மான்டேகு, தமது இந்தியா சுற்றுப்பிரயாணத்தின்போது வியாக்கி யானம் செய்தார். ஹிந்து-முஸ்லிம் ஒப்பந்தத்தைக் காங் கிரஸும்லீகும் அங்கீகரித்தன. புதுசீர்திருத்தங்களுக்கு இந்த ஒப்பந்தத்தையே அடிப்படையாகக் கொண்டார் மான்டேகு. ஒரு சீர்திருத்தத் திட்டம் பார்லிமெண் டில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் பொதுப் படையான போக்கு, அப்பொழுது மேஜராக விருந்து பின்பு பிரபுவான செம்ஸ்போர்டுக்கு 1916 ஏப்ரலில் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. செம்ஸ்போர்ட், ஹார் டிஞ்சுக்குப் பின்பு வைஸ்ராயாக வந்தார். அவரும் மான்டேகும் சேர்ந்து புது சீர்திருத்தத் திட்டத்தை வகுத்தனர். இத்திட்டம் 1919ல் பிரிட்டிஷ் பார்லி

மெண்டில் அங்கீகரிக்கப்பட்டது. அப்பொழுது இந்தியா உதவி மந்திரியாகவிருந்தது சின்ஹா பிரபு.

முதல் உலக யுத்தம் 1918 நவம்பர் 11ந் தேதி முடிந்தது. யுத்தம் முடிந்த 6 மாதத்திற் கெல்லாம், அவசரச் சட்ட ஆட்சியும் இந்தியர் பாதுகாப்புச் சட்டமும் முடியவேண்டியிருந்தது. ஆனால் ஆளும் வர்க்கத்தினருக்கு இது பிடிக்கவில்லை. யுத்தகாலத்தில் அமலிலிருந்த அடக்குமுறைச் சட்டங்கள் நீடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இக்கமிட்டி இரண்டு மசோதாக்களை சிபார்சு செய்தது. கமிட்டியின் தலைவரான ஸர் ஜான் ரௌலட்டின் பெயரால், இவ்விரு மசோதாக்களும் ரௌலட் மசோதாக்கள் எனப் பெயர் பெற்றன. இம்மசோதாக்கள் நாடெங்கும் தீவிர கிளர்ச்சியையும் கண்டனத்தையும் எழுப்பின. இக் கிளர்ச்சியன் பயனாகத் தான் இந்தியா ஒரு புதுத் தலைவரைப் பெற்றது.

அவர்தான் மோஹன்தாஸ் கரம்சந்த் காந்தி. சத்தியாக்ரஹம் என்ற புதுதர்மத்தைப் போதித்தார் காந்திஜி. அதன் முதல் வெற்றி தென்னாப்பிரிக்காவில் கிட்டியிருந்தது. பிர்மச்சரியம், பற்றற்ற தன்மை, சத்தியம், அஹிம்ஸை ஆகியவை காந்திஜியின் வாழ்க்கை தர்மத்தின் முக்கிய கோட்பாடுகளா யிருந்தன. தென்னாப்ரிக்காவில், அவர் தமது சொத்தையும் உடைமைகளையும் உதறிவிட்டு, வறுமை என்ற பிரதிக்ஞையை எடுத்துக்கொண்டு 1915ல் இந்தியாவுக்குத் திரும்பினார். 1917-ல் அதிகாரிகளால் கூட்டப்பட்டிருந்த யுத்த மகாநாட்டில் அவர் கலந்துகொண்டார். மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு திலகரையும் வற்புறுத்தினார். ஆனால் திலகர் மறுத்து விட்டார். மகாநாட்டில் காந்திஜி,

ஹோம் ரூலின் அவசியத்தை வற்புறுத்தி விட்டு யுத்த முயற்சியில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவரே யுத்தத்துக்குச் சிப்பாய்களைச் சேர்த்தார்.

64 சட்ட விரோதமான தவணைகள் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்ட அவுரித் தோட்டக்காரர்கள் நிவாரணத்திற்காகச் சம்பரானில் 1917-ல் அவர் சத்தியாக்கிரக இயக்கம் நடத்தினர். 1917-ல் விவசாயிகள் நிவாரணத்திற்காக கெய்ரோவிலும், கொள்ளைக்காரர்கள் பயத்தை போக்க பார்ஸாடிலும் அவர் சத்தியாக்ரஹ இயக்கம் நடத்தினர். 1918ல் சாகும்வரை உபவாசமிருக்க முற்பட்டு, அவர் அஹ்மதபாத் ஆலைத் தொழிலாளருக்குச் சம்பள உயர்வு பெற்றுத் தந்தார். இவ்வாறு சத்யாக்ரஹ இயக்கங்களை வெற்றிகரமாய் நடத்தியிருந்த அவர், ரௌலட்டு மசோதாக்களை எதிர்த்தும் இதே முறையில் போராட விரும்பி, அகில இந்திய சத்யாக்ரஹ இயக்கம் தொடங்கினர். ஆனாலும் அஹிம்ஸையின் தத்துவத்தையும் தாத்பரியத்தையும் மக்கள் பூர்ணமாய் உணராதிருந்ததால் நாட்டில் சில இடங்களில் பலாத்கார சம்பவங்கள் நேரிட்டன. இதன் விளைவாய், சத்யாக்ரஹ இயக்கத்தை அவர் திடீரென நிறுத்தி விட்டார்.

## 5. சுயராஜ்ய பருவம்

1919ல் காங்கிரஸ் மகாநாடு அமிர்தசரஸில் கூடுவதாக ஏற்பாடகியிருந்தது. ஆனால் ராணுவத்துக்கு அதிக ஆட்கள் தந்து உதவிவந்த பஞ்சாப் பாதிக்கப் படக் கூடாதென்று கருதி, அங்கு மகாநாட்டை நடத்த அனுமதிக்க சர்க்கார் மனமொப்பவில்லை. 1919 ஏப்ரலில்

ஒரு நாள் டாக்டர் கிச்லூவும், டாக்டர் சத்யபாலும், ஜில்லா மாஜிஸ்டிரேட் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டு, அங்கிருந்து கண்காணு இடத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டனர். இதைக் கண்டு ஆத்திரம் கொண்ட மக்கள், எதிர்ப்புக் கிளர்ச்சி செய்துகொண்டு, ஜில்லா மாஜிஸ்டிரேட் வீட்டை நோக்கிச் சென்றனர். இடை வழியில் ரயில் பாதையருகில், ராணுவ பாராக்காரர்கள் அவர்களை வழிமறித்து அவர்கள்மீது துப்பாக்கிப் பிர யோகம் செய்தனர். சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் பிரேதங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. குத்தி யெழுப்பப்பட்டிருந்த மக்கள் ஆவேசம், கொலை, கொள்ளை முதலிய வழிகளிலும் பாய்ந்தது. இதற்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டு 1919 ஏப்ரல் 18ந்தேதி ஜெனரல் டையர், ஜலியன்வாலா பாக் கொடுமையைச் செய்து காட்டினார். டையர் உத்தரவின் பேரில் 1600 தடவை போலீஸார் சுட்டனர்; 800 பேர் செத்து விழுந் தனர்; 2000 பேர் காயமடைந்தனர். இவ்வளவுக்கு மிடையில் டிஸம்பரில் காங்கிரஸ் மகாநாடு அமிர்தசர ஸில் கூடியது. பொதுஜன ஆத்திரத்தின் பயனாய் நடந்த பலாத்காரச் செயல்களைக் கண்டித்து, காந்திஜி கொண்டு வந்த தீர்மானத்திற்கு அதிக எதிர்ப்பு இருந் தது. ஆனால் முடிவில் அத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. 1915-ம் வருஷத்திலிருந்து காவல் கைதி களாக வைக்கப்பட்டிருந்த அலி சகோதரர்களும், மௌலானா அபுல்கலாம் ஆஜாதும், யுத்தம் முடிந்து 13 மாதங்களுக்குப்பின், அதாவது 1919 டிஸம்பரில் விடுதலை செய்யப்பட்டனர். ஜலியன்வாலா பாக் அக் கிரமத்தால் பொது மக்களிடை ஏற்பட்டிருந்த ஆத்திர மும் மனக்கசப்பும், கிலாபத் இயக்கத்தில் பிரிட்டிஷார்

செய்த துரோகத்தால் வலுத்தன. 1920 ஏப்ரல் 9ந்தேதி முஸ்லிம்களும் ஹிந்துக்களும் ஒன்று சேர்ந்து, சர்க்காருடன் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கத் திட்டம் வகுத்தனர். 1920 ஆகஸ்ட் முதல் தேதி திலகர் இறந்தார்; காந்திஜி தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். 1920 செப்டம்பரில் கல்கத்தாவில் காங்கிரஸின் விசேஷ மகாநாடு ஒன்று கூடியது. கௌரவ பதவிகள், பட்டங்கள், கோர்ட்டுகள், கல்விக் கழகங்கள், சட்ட சபைகள், சர்க்கார் உத்தியோகங்கள் - எல்லாவற்றையும் பகிஷ்கரித்து சர்க்காருடன் ஒத்துழையாமை அனுஷ்டிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்துடன் காங்திரஸின் சரித்திரத்தில் ஒரு புது பருவம் - சுயராஜ்ய பருவம் - ஆரம்பமாயிற்று. "சமாதான, சட்ட பூர்வமான வழிகள் மூலம் சுயராஜ்யம் அடைவதே" காங்கிரஸின் லக்ஷியம் என்று 1920 டிஸம்பரில் காங்கிரஸின் கொள்கை திருத்தி யமைக்கப்பட்டது. அன்று முதற்கொண்டு சுதேசி என்றால், கையால் நூற்று நெய்த துணியையும், மற்றும் கிராமங்களிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களையும் உபயோகிப்பது என்று பொருள்படலாயிற்று; அன்னிய சரக்குகளில் பிரிட்டிஷ் சரக்குகளை மட்டும் தேர்ந்தெடுத்துப் பகிஷ்கரிப்பது ஒருவகையில் பலாத்காரமாகுமாதலால், எல்லா அன்னிய சரக்குகளையும் பகிஷ்கரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. தேசீய கல்வி இயக்கம் மீண்டும் தொடங்கியது. ஹோம்ரூல் கோஷம் போய் சுயராஜ்யம் என்ற முரசு முழங்கியது. சட்டசபைகளில் பிரவேசிக்க காங்கிரஸ் மறுத்தது. 1921ல் எட்வர்ட் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவ் விஜயத்தை இந்தியர் பகிஷ்கரித்தனர். முதன் முறையாக

அகில இந்திய சட்டமறுப்பு இயக்கம் நடத்த முயற்சி செய்யப்பட்டது. குஜரத்தில் பர்தோலி, ஆனந்த் தாலுக்காகளில் வரி செலுத்தாமை இயக்கம் நடத்த காந்திஜி திட்டம் வகுத்தார். அவர் திட்டத்தை அனுசரித்து, பொதுஜன சட்ட மறுப்பு இயக்கம், 1921ல் அஹ்மதாபாத்தில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டில் அங்கீகரிக்கப் பட்டது.

இம் மகாநாடு கூடுவதற்கு முன்பாக காந்திஜிக்கும் ரீடிங் பிரபுவுக்குமிடை பேச்சு வார்த்தைகள் நடந்தன. அவை பலன் தராமல் முறிந்தன. ஆயினும் ஐக்ய மாகாணத்தில் கோராக்பூர் ஜில்லாவில் சௌரி சௌராவில் பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றதன் காரணமாய் காந்திஜி தம்து வரி செலுத்தாமை இயக்கத்தை நிறுத்தி விட்டார், சௌரி சௌராவில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் கொளுத்தப்பட்டு அதனுள்ளிருந்த ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் 21 கான்ஸ்டபிள்களும் உயிருடன் எரிக்கப்பட்டனர். இயக்கம் நின்றவுடன் காந்திஜி கைது செய்யப்பட்டு ராஜத்துவேஷத்தை பரப்பியதாக விசாரிக்கப் பட்டார், தமது கொள்கைகளுக்கு உண்மையாய் காந்திஜி எதிர்வழக்காட மறுத்து விட்டார். அவர் குற்றவாளியென்று தீர்ப்பு கூறப்பட்டு 6 வருஷ சிறைவாசம் விதிக்கப்பட்டார். அவர் சிறைக்குள் சென்று விட்ட மாத்திரத்தில், சட்ட மறுப்பு கொள்கை பற்றி பல சந்தேகங்கள் எழுந்து விட்டன. இப் பிரச்னையை ஆராய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது, இக் கமிட்டி தேசம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து நிலைமையை அறிந்துவிட்டுக் கூடி ஆலோசித்தபோது, சரி பாதி அங்கத்தினர்கள் சட்ட மறுப்பையும் சரிபாதி அங்கத்தினர்கள் சட்டசபைப் பிரவேசத்தையும் ஆத

ரித்தனர், 1923 டிஸம்பரில் காங்கிரஸின் விசேஷ மகா நாடு டில்லியில் கூடியது. அம் மகாநாடு ஒரு வகையில் சட்டசபைப் பிரவேசத்தை அனுமதித்தது. அம்முடிவு காகினடாவில் 1923 டிஸம்பரில் நடந்த மகா நாட்டில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 1924 பிப்ரவரி 5ந் தேதி காந்திஜி விடுதலை யடைந்தார். 1924 டிஸம்பரில் பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிற்கு அவர் தலைமை வகித்தார். சத்யாக்ரஹ இயக்கம் மீண்டும் தொடங்குவதை ஆதரிக்கக்கூடிய நிலையில் தேச மில்லை. 1925-ல் தேசபந்து ஸி. ஆர். தாஸ் காலமானார். 1925-ல் கான்பூரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் சட்டசபை பிரவேசம் அங்கீகரிக்கப்பட்டது. ஆயினும் உண்மையில் பாட்னாவில் 1925-ல் கூடிய காங்கிரஸ் மகாநாட்டில், நிர்மாணத் திட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் ஒரு பிரிவாகவும் சட்டசபை வேலைத் திட்டத்தில் நம்பிக்கைகொண்டவர்கள் ஒரு பிரிவாக வும், காங்கிரஸ் பிளவுபட்டுவிட்டதென்றே கூறவேண்டும். சட்டசபைத் திட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந் தவர்கள் வெகு சீக்கிரத்திலேயே தங்கள் நம்பிக்கையை கைவிட வேண்டியதாயிற்று. சட்டசபைக்ளிலிருந்து காங்கிரஸ் வாதிகள் ராஜிநாமா செய்யவேண்டுமென்று பண்டித மோதிலால் நேருவே சிபார்சு செய்தார். அதன் பேரில் 1930-ம் வருஷ ஆரம்பத்தில் காங்கிரஸ் வாதி கள் சட்டசபையிலிருந்து ராஜிநாமா செய்தனர். அக் கட்டம் வருவதற்கு முன், 1928-ம் வருஷத்தில் கல்கத் தாவில், மோதிலால் நேரு தலைமையில் காங்கிரஸ் கூடிய போது, ஒரு வருஷத்திற்குள் இந்தியாவில் டொமினி யன் அந்தஸ்து ஏற்படுத்த வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்த ஒரு

வருஷ தவணையில் எதுவும் நடக்கவில்லை. காந்தி-இர்வின் சம்பாஷணைகளும் 1929 டிஸம்பர் 23ந்தேதி முறிந்தன. இவற்றின் பயனாக 1929 டிஸம்பர் 31-ந் தேதி லாகூரில் சுதந்திரக் கொடி நாட்டப்பட்டது.

## 6. பூர்ண சுயராஜ்ய பருவம்

அத்துடன் அடுத்த கட்டம் ஆரம்பமாயிற்று—பூர்ண சுயராஜ்ய பருவம். முடிந்தால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளாக இருப்பதென்றும், அவசியமானால் அதிலிருந்து விலகுவதென்றும் வியாக்கியானம் செய்யப்பட்ட சுயராஜ்ய கோஷம் போய் பூர்ண சுயராஜ்யம் என்ற முரசு முழங்கியது. ஸ்திரமற்ற நிலைமை போய் கண்டிப்பான நிலைமை எடுத்துக் கொள்ளப் பட்டது. சுதந்திரம் பெறவேண்டுமானால் பலமாகப் போராடுவது அவசியம் என்பது உணரப்பட்டது. இத்தகைய உணர்வின் பயனாகவே, உப்பு சத்யாக்ரஹமும் வரி செலுத்தாமை இயக்கமும் குஜரத்தில் பர்தோலி ஜில்லாவிலும், கர்னாடகப் பிரதேசத்தில் சிர்ஸி, சித்தப்பூர் தாலுகாக்களிலும், இன்னும் பல்வேறு இடங்களில் இவற்றிற்கு ஆதரவான இயக்கங்களும் நடைபெற்றன. இந்தியாவில் இப்போராட்டம் 8 மாதகாலம் நடைபெற்றது. இங்கிலாந்திலோ, 1930 டிசம்பரில் லண்டனில் கூட்டப்பட்டிருந்த வட்டமேஜை மகாநாடு அடியோடு முறிந்தது. அதன் பின்னர், காங்கிரஸ் வேலைகளின் பலனாகவும், சப்ரூ, ஜெயகர், சாஸ்திரி போன்ற மிதவாதிகளின் வற்புறுத்தலாலும் காங்கிரசுடன் சமரசம் செய்வது அவசியம் என்று பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஸே மாக்டனல்ட் கருதினர். 1931 ஜனவரி 26ந் தேதி காந்திஜியும், அவ் வருஷக் காரியக் கமிட்டி

அங்கத்தினர்களும் முந்திய வருஷங்களி லிருந்த அங்கத்தினர்களுமாகக் கைது செய்யப்பட்டிருந்த 26 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். சத்யாக்ரஹப் போர் நடந்துகொண்டிருந்தது. அறுபதாயிரம் கைதிகள் சிறையில் வாடிக்கொண்டிருந்தனர். இதற்கிடையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பம் செய்யப் பட்டன. இச் சம்பாஷணைகளின் பயனாய் 1931 மார்ச் 5ந் தேதி காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இயக்கத்தின் முதல் வெற்றி அதுவேயாகும். அதன்படி, சில உப்பு சலுகைகள் தரப் பட்டன. அஹிம்ஸா முறைப்படி மறியல் செய்வது அனுமதிக்கப் பட்டது. விவசாயிகள் குறைகளை நிவர்த்திக்க சத்யாக்ரஹம் செய்ய உரிமை யுண்டு என்பது அங்கீகரிக்கப் பட்டது. வரி செலுத்தாமை இயக்கங்களின் போது ஜப்தி செய்யப்பட்ட நிலங்களைத் திருப்பித் தந்துவிடுவதாக ஒத்துக்கொள்ளப் பட்டது. காங்கிரஸைப் பொறுத்தவரை, போலீஸ் அதிக்ரமங்களுக்கு ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வாபஸ் பெற காங்கிரஸ் சம் மதித்தது. குஜரத்தில் சர்க்காருக்குச் செலுத்தப் படாமல் மறுக்கப்பட்ட 20 லக்ஷ ரூபாய் வரி மீண்டும் செலுத்தப்படும் என்பதற்கும் காங்கிரஸ் உத்தரவாதம் தந்தது. அவ்வாறே வரிகள் ஒழுங்காக கஜானாவில் செலுத்தப்பட்டன. வரியை நிறுத்தும்படியும் செலுத்தும்படியும் உத்தரவிட காந்திஜிக்கு செல்வாக்கு இருப்பது ரிவனியூ மந்திரியா யிருந்த ஹாட்ஸனை உறுத்தியது. சர்க்கார் அதிகாரத்தை அவர் நிலைநாட்ட விரும்பி அதற்கு முந்திய பருவத்தில் சரியான பயிர் விளையாததால் தவணை ஒத்திப்போடப் பட்டிருந்த ஒரு லக்ஷம்

ரூபாயையும் சேர்த்து வசூலிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார். இதைக் கண்ட காங்கிரஸ் வருத்தம் கொண்டது. ஒப்பந் தத்தை முறிக்க அதிகாரவர்க்கம் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது என்பது வெளிப்படையாக விருந்தது. ஹாட்ஸன் ஓரளவிற்கு வெற்றி பெற்றார்; பலாத்கார மாய் ஐம்பதாயிரம் ரூபாய் வசூலித்துவிட்டார். அதன் பேரில் 1931 டிசம்பரில் நடைபெற விருந்த வட்ட மேஜை மகா நாட்டிற்குப் போக காந்திஜி மறுத்தார். பர்தோலி சம்பவங்கள் பற்றி விசாரணை செய்யப்படும் என்று வாக்குறுதி தந்ததன்பேரில், முடிவில் காந்திஜி போகச் சம்மதித்தார். விசாரணை வெறும் கேலிக் கூத்தாக முடிந்தது. காந்திஜி லண்டனில் இருக்கும் போதே, ஐக்ய மாகாணத்தில் பண்டித நேருவும், எல்லைப்புற மாகாணத்தில் கான் அப்துல் கபார்கானும் கைது செய்யப்பட்டனர். வங்காளத்தில் அவசரச் சட்ட தர்பார் நடந்துவந்தது. காந்திஜி திரும்பிய போது, நிலைமை ஒரே குழப்பமாக விருந்ததைக் கண் டார். லண்டனில் முஸ்லிம்கள் வெளிப்படையாக வகுப்புவாதக் கொள்கையைப் பின்பற்றினர்; மித வாதிகளோ முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாய் விளங்கினர். ஹிந்துக்களிட மிருந்து ஹரிஜனங்களைப் பிரிக்க சர்க்கார் முயற்சி செய்து வந்தனர். இத்தகைய பிரிவினையை எதிர்க்கத் தம் உயிரையும் தியாகம் செய்யச் சித்தமாயிருப்பதாக காந்திஜி லண்டனில் கூறி யிருந்தார். லண்டனிலிருந்து திரும்பியபின் பம்பாயில் அஜாத் மைதானத்தில் அவர் பிரசங்கம் செய்தபோதும் அதையே கண்டிப்பாகக் கூறினார். காந்திஜி வைஸ் ராயைக் காண விரும்பினார்; ஆனால் அவரைக் காண

வில்லிங்டன் பிரபு மறுத்துவிட்டார். காங்கிரஸ் மீண்டும் ஒத்துழையாமை, சட்டமறுப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தது. போராட்டம் மீண்டும் ஆரம்பமானது. 1932-33-ல் 12,0000 பேர் கைது செய்யப்பட்டனர். 1932 மார்ச்சில் ராம்ஸே மாக்டனுல்ட் வெளியிட்ட வகுப்பு தீர்ப்பில், ஹிந்துக்களிலிருந்து ஹரிஜனங்கள் பிரிக்கப்பட்டிருந்த பிரச்னைமீது, தாம் சாகும்வரை உபவாசம் இருக்கத் தயார் என்று காந்திஜி கூறினுர். இத் தீர்மானத்தைத் தெரிவித்து அப்பொழுது இந்தியா மந்திரியாக விருந்த ஸர் ஸாமுவல் ஹோருக்குக் காந்திஜி மார்ச்சில் எழுதினுர். 1932 செப்டம்பரில் அவர் தமது உண்ணுவிரதத்தை ஆரம்பித்தார். ஆறு தினங்களில் தீர்ப்பு திருத்தப்பட்டது. பிரதமரால் அளிக்கப்பட்டதை விட பல ஸ்தானங்கள் ஹரிஜனங்களுக்குக் கிடைத்தன. இந்த ஒப்பந்தத்தில் டாக்டர் அம்பேத்காரும் கையெழுத்திட்டிருந்தார். ஆனுல் பின்னுல் விலகிக்கொண்டார். ஹரிஜனங்களுக்குத் தரப்பட்டிருந்த அதிகப்படியான சலுகை வங்காளத்தை உறுத்தியது. 1932-33ல் நடந்த அடக்கு முறை மிகவும் கடுமையாகவும் உக்கிரமாகவும் இருந்தது. ஹரிஜன இயக்கத்தை நடத்த வசதி வேண்டுமென்று காந்திஜி சிறையி லிருந்தபோது கேட்டார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் 1933 ல் அவர் மற்ருெரு முறை உபவாசம் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. உபவாசத்தின்போது அவர் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான பின், ஒரு வருஷத்திற்கு அரசியலில் ஈடுபடுவதில்லை யென்றும், ஹரிஜன தொண்டிலேயே அவ் வருஷம் முழுவதும் ஈடுபடுவதென்றும் அவர் கங்கணம் செய்துகொண்டார். இந்த

லக்ஷியத்திற்காக அநேகமாய் நாடு முழுவதும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்தார். பெருந்தூரம், அவர் கால் நடையாகவே பிரயாணம் செய்தார். 1934 ஏப்ரலில் சத்யாக்ரஹ இயக்கத்தை நிறுத்த அவர் தீர்மானித்தார். அத்தீர்மானம 1934 மேமாதத்தில் பாட்னுவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. காங்கிரஸை நசுக்கியாகி விட்ட தென்று வில்லிங்டன் பிரபு இறுமாப்பு கொண்டார். ஆகவே 1934 நவம்பரில் மத்திய அசெம்பிளி தேர்தல் களை நடத்த அவர் உத்தரவிட்டார்.

சர்க்காரின் சவாலை ஏற்றுக்கொள்வதென்று 1934 அக்டோபரில் ராஜன் பாபு தலைமையில் பம்பாயில் கூடிய காங்கிரஸ் தீர்மானித்தது. தேர்தலின் முடிவு காங்கிரஸின் வெற்றியைக் கண்டது. 1934 வருஷத்தி லிருந்து 1945ம் வருஷம் வரை, மத்திய அசெம்பிளியில் காங்கிரஸ் கட்சி, மிகுந்த ஐக்யத்துடனும் அதிகார வர்க்கத்துக்குப் பணியாத உறுதியுடனும் உழைத்து வந்துள்ளது. அசெம்பிளிக்குச் சென்ற போதெல்லாம், சர்க்கார் தயாரித்த எல்லா பட்ஜெட்டுகளையும் நிரா கரித்துத் தோற்கடித்தது.

## 7. மந்திரிசபை பருவம்

**1935**ல் புது. இந்திய அரசாங்கச் சட்டம் நிறை வேற்றப்பட்டு, மாகாண சுயாட்சி சம்பந்தமான ஷரத்து கள் மட்டும் அமலில் கொண்டு வரப்பட்டன. 1937 பிப்ரவரியில் நடந்த புது மாகாண தேர்தல்களில் 11ல் 6 மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. ஆனால் சட்டத்தில் கண்டிருந்த பாதுகாப்புகளையும் விஷேச

அதிகாரங்களையும் உபயோகித்து, கவர்னர்கள், மாகாணத்தின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடுவதில்லையென்று வாக்குறுதி தந்தாலொழிய, மந்திரி சபைகள் அமைக்க காங்கிரஸ் மறுத்தது. நான்கு மாதங்களுக்குப் பின், அதாவது 1937 ஜூன் மாதத்தில் இந்த வாக்குறுதிகள் தரப்பட்டன. ஜூலையில் 6 மாகணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. பின்னர் அஸ்ஸாமும் எல்லைப்புற மாகாணமும் காங்கிரஸ் வழியைப் பின்பற்றின. இத்துடன் வெறும் கிளர்ச்சி செய்துவந்த பருவம் போய், பொறுப்பேற்கும் பருவம் வந்தது. இரண்டு வருடங்களும் மூன்று மாதங்களும் காங்கிரஸ் மந்திரி சபைகள் அதிகாரத்திலிருந்தன. இக் குறுகிய காலத்திற்குள் அவர்கள் பல சட்டங்களும் சீர்திருத்தங்களும் புகுத்தியுள்ளனர். எல்லா மந்திரி சபைகளும் முதன் முதலாக உடனடியான கவனம் செலுத்தியது, மதுவிலக்கு பற்றியும், விவசாயக் கடன் நிவாரணம் பற்றியும். ஒரிஸ்ஸா, ஐக்ய மாகாணங்களில், 1931-ல் கராச்சி காங்கிரஸில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் சாசனத்தையும், 1936-ல் லக்ஷ்மணபுரியில் அங்கீகரிக்கப்பட்ட் விவசாய சீர்திருத்தங்களையும் அனுசரித்து குத்தகை சீர்திருத்தம் செய்யப்பட்டது.

குத்தகைக்காரர்கள் கொடுமைக்கு ஆளாகி வேலை செய்த விவசாயத் தொழிலாளர் குறைகளை நிவர்த்திப்பதிலும், சாகுபடி செய்யும் விவசாயிக்கும் சர்க்காருக்குமிடையேயுள்ள தரகர்களை நீக்குவதிலும் காங்கிரஸ் விசேஷ சிரத்தை கொண்டது. சென்னையில், சட்ட சபையால் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி ஜமீன்தாரிப் பிரச்னையை தீர்க்கமாக ஆராய்ந்து ஒரு அறிக்கை

வெளியிட்டது. ஐக்ய மாகாணத்தில் கிராமப் புன ருத்தாரணத்தில் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்ளப் பட்டது. பீஹாரில் கல்வியறிவைப் பரப்பத் தீவிர முயற்சிகள் நடந்தன. மத்திய மாகாணத்திலும் பம்பாயிலும், வர்தா கல்வித் திட்ட அபிவிருத்தியில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. கதர் அபிவிருத் திக்குச் சென்னை தாராளமாக நிதி சகாயம் செய்தது. காங்கிரஸ் மந்திரி சபைகளுக்கு விசேஷமாக பல இடைஞ்சல்கள் இருந்தன.

அதிவேகமாய்ப் பல காரியங்களைச் செய்யக் காங்கிரஸ் முயற்சிக்கிறது என்று தாக்கியது ஒரு சாரார் ; மற்றொரு புறத்தில், தங்கள் பிரச்னைகளிலும் நல வுரிமைகளிலும் காங்கிரஸ் போதிய கவனம் செலுத்தவில்லை யென்று குறை கூறினர் தொழிலா ளரும் விவசாயிகளும். குறிப்பாக சமதர்மவாதிகளும், கம்யூனிஸ்ட் வாதிகளும் தீவிர அதிருப்தி கொண்டு கிளர்ச்சி செய்து வந்தனர். இத் தீவிர கட்சிகள், 1936-ல் லக்ஷ்மணபுரியில் நடந்த காங்கிரஸ் மகா நாட்டிலேயே தலை தூக்கின. மேனாட்டு சமதர்ம கொள்கைஸ்ய இந்திய சூழ்நிலைக்கேற்ப திருத்தி யமைக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது அதே ஆண்டில் பெயிஸ்பூரில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டில். சென்னையில் காங்கிரசுக்கு எதிராகவிருந்த பல கட்சி கள் ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி சத்யா க்ரஹம் செய்து சில நூற்றுக்கணக்கான பேரை சிறைக்கனுப்பினர். ஆந்திர மாகாணப் பிரிவினை செய்யவும் சென்னை சர்க்கார் முயற்சித்தது ; ஆனால் வெற்றிபெறவில்லை.

பல்வேறு மாகாணங்களிலிருந்த மந்திரி சபைகளின் வேலையையும் ஒருமுகப்படுத்த வேண்டியிருந்தது. ஒருமுகப்படுத்த மத்திய சர்க்கார் கிடையாது. ஆகவே காரியக் கமிட்டி அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. பலாத்காரச் செயல்களுக்காகத் தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்று பீஹாரிலும் ஐக்ய மாகாணத்திலும் மந்திரி சபைகள் முயற்சித்தன. அது அவர்கள் அதிகார எல்லைக்குப் புறம்பானதென்று கவர்னர்கள் ஆக்ஷேபித்தனர். இதன் பேரில் இரு மந்திரி சபைகளும் ராஜிநாமா செய்தன. 1938 பிப்ரவரியில் ஹரிபுராவில் கூடிய காங்கிரஸ் மகாநாடு அவர்களுக்கு ஆதரவளித்தபோது, வைஸ்ராய் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று; கவர்னர்கள் பணிந்தனர். ஒரிஸ்ஸாவில், ஒரு கீழ்வகுப்பு உத்யோகஸ்தரை கவர்னராக நியமிக்க முயற்சி நடந்தபோது, காங்கிரஸ் அதை எதிர்த்து அதில் வெற்றியும் பெற்றது. ஐக்ய மாகாணத்தில் கற்பழித்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருந்த ஒரு கல்வி அதிகாரியை, அவர் தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்பே, சட்ட இலாகா மந்திரி விடுதலை செய்தபோது, சட்டத்தை இவ்வாறு துஷ்பிரயோகத்தைச் செய்ததைக் கண்டிக்கக் காரியக் கமிட்டி தலையிட்டு அந்த மந்திரியை ராஜிநாமா செய்யும்படி கட்டாயப் படுத்தியது. பின்னர் மந்திரி சபை முழுவதுமே விசாரணைக்கு வந்தது. ஒரு சில மந்திரிகளை விலக்க விரும்பிய பிரதமர், காரியக் கமிட்டிக்குத் தெரியாமலும் பார்லிமெண்டரி போர்ட் அனுமதி பெறாமலும், ராஜிநாமா செய்தார். உடனே அவரைக்

காரியக் கமிட்டி கண்டித்துப் புதுப் பிரதமரையும் புது மந்திரி சபையையும் அமைக்க ஏற்பாடு செய்தது.

## 8. யுத்த பருவம்

**1939** செப்டம்பர் 3-ந் தேதி இரண்டாவது உலக யுத்தம் தொடங்கியது. யுத்த முயற்சியில் காங்கிரஸ் பங்கெடுத்துக் கொள்ளலாமா என்ற பிரச்னே எழுந்தது. 1929-ம் ஆண்டிலிருந்தே யுத்தம் தொடங்கினல், நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு நாட்டை காங்கிரஸ் ஆயத்தம் செய்து வந்திருக்கிறது. கடைசியில் யுத்தமும் வந்தது. யுத்த லக்ஷியங்கள் என்ன, அவை இந்தியாவில் எப்படி அமலில் கொண்டுவரப்படும் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி பிரிட்டிஷ் சர்க்காரிடம் கேட்டது. பிரிட்டிஷ் மக்களே இன்னும் தங்கள் யுத்த லக்ஷியங்கள் எவை யென்று நிர்ணயித்துக் கொள்ளவில்லேயே என்ற பதில்தான் காங்கிரஸுக்குக் கிடைத்தது. ஆகவே, பதவியிலிருந்து விலகுவதைத் தவிர, காங்கிரஸ் மந்திரிகளுக்கு வேறு வழியில்லாது போயிற்று. 1939 அக்டோபர், நவம்பர் மாதங்களில் எல்லா காங்கிரஸ் மந்திரி சபைகளும் ராஜிநாமா செய்தன. இந்த மாகாணங்களின் நிர்வாகத்தை, 1935-ம் வருடச் சட்டத்தின் 93ம் பிரிவின் கீழ் கவர்னர்கள் எடுத்துக் கொண்டனர். வைஸ்ராய் கவுன்ஸிலில் இன்னும் சில ஸ்தானங்கள் இந்தியருக்குத் தரப்படுமென்றும், 9 கோடி முஸ்லிம்கள் சமஷ்டிக்கு ஆக்ஷேபித்ததால், அதை அமலில் கொண்டு வருவது சாத்தியமில்லே யென்றும், லின்லித்கோ பிரபுவும், இந்தியா மாதிரி எமரியும், 1940 ஆகஸ்

டில், அறிவித்தனர். தன்னுடைய விவகாரமல்லாத யுத்தத்தில் தனக்குத் தெரியாமலும் தன் சம்மதமின்றியும் இந்தியா இழுக்கப்பட்டதைக் கண்டித்து, தனிப்பட்ட சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் தொடங்கியது. இந்த இயக்கத்தை நடத்தும் பொருட்டு காந்திஜி வெளியிலிருந்து கொண்டார். காந்திஜியை வெளியில் விட்டு வைப்பது ஒரு வகையில் வைஸ்ராய்க்கும் வசதியாயிருந்தது. நன்றாக நூற்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பது ஒவ்வொரு சத்யாக்ரஹிக்கும் அத்தியாவசியமான யோக்யதாம்சமாக விதிக்கப்பட்டது. காந்திஜீயின் அங்கீகாரம் பெற்றவர்களே சத்யாக்ரஹம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இந்த சட்ட மறுப்பு இயக்கம் ஒரு வருஷம் நடந்தது. பின்னர் சத்யாக்ரஹிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

**1942**-ம் வருஷம் பிறந்தது. இந்தியாவுக்கு பிரிட்டிஷ் சர்க்காரின் புதுத் திட்டத்தை சர் ஸ்டாபோர்ட் கிரீப்ஸ் எடுத்துச் செல்வார் என்று மார்ச் மாத ஆரம்பத்தில் பார்லிமெண்டில் அறிவிக்கப்பட்டது. மார்ச் 23ந் தேதி கிரிப்ஸ் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்; ஏப்ரல் 12ந் தேதி அவர் இங்கிலாந்துக்குத் திரும்பினர். இந்த நாட்களுக்கிடையில்தான், ஆயுதங்கள் நிறைந்த சில அமெரிக்கக் கப்பல்களை ஜப்பானியர் திரிகோணமலையிலிருந்து விசாகபட்டணம்வரை விரட்டியடித்துக் கொண்டு வந்தனர். காகினடா மீதும் விசாகப்பட்டணம்மீதும் குண்டுகள் வீசப்பட்டன. விசாகப்பட்டணத் துறைமுகத்தில் யந்திர பீரங்கிப் பிரயோகமும் நடந்தது. ஆனாலும் புயல் சீக்கிரம் ஓய்ந்துவிட்டது; இந்தியா மீது படையெடுக்கப்படலாம் என்ற பீதி இருந்ததேயொழிய, படையெடுப்பு வரவில்லை. சென்னை கவர்னர்

அதற்குள் மிகவும் பீதியடைந்து, துறைமுகத்தில் தங்கி யிருந்த கப்பல்களை யெல்லாம் நடுக்கடலுக்குத் துரத்தி விட்டதோடு மட்டுமின்றி, நகரவாசிகளும் நகரத்தை விட்டு எங்கேயாவது ஓடிவிடுமாறு போதனை செய்தார். நகரிலிருந்து பெரும்பான்மையான மக்கள் காலி செய்து ஓடிவிட்டனர். ஏப்ரல் 20-ந் தேதிவாக்கில் இந்த ஓட்டம் சிறிது ஓய்ந்தது. இதற்கிடையில் டில்லி வந்து சேர்ந்த சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் மார்ச் 25-ந் தேதி ராஷ்டிரபதியுடன் சம்பாஷணை தொடங்கினர். பிரிட்டனில் மன்னருக்கும் மந்திரி சபைக்கும் என்ன உறவு இருக்கிறதோ, அதே உறவு, இந்தியாவில் வைஸ் ராய்க்கும், புதிதாக அமைக்கப்படும் மந்திரி சபைக்கும் இருக்கும் என்று கிரிப்ஸ், அந்த சம்பாஷணையின்போது தம்மிடம் உறுதி கூறியதாக, ராஷ்டிரபதி பின்னர் தெரிவித்தார். இதனல் அதிக நம்பிக்கைக்கு இடமேற் பட்டது. இந்திய யூனியனிலிருந்து பிரிந்துவிட எந்த மாகாணத்துக்கும் உரிமையுண்டு என்றிருக்கும் வரை, கிரிப்ஸ் திட்டம் ஒரு காசுபெறாது என்று காந்திஜி மட்டும் கூறிவந்தார். ஏப்ரல் 5-ந் தேதி காந்திஜி டில் லியை விட்டுப் புறப்பட்டார். அதன் பின் காரியக் கமிட்டியுடன் அவர் தொடர்பு வைத்துக்கொள்ள வில்லை. சமஸ்தான மக்களுக்கோ இத்திட்டத்தில் இட மில்லாதிருந்தது. டொமினியன் அந்தஸ்தா, பூரண சுதந்திரமா என்பதைத் தீர்மானித்துத் தன் விதியைத் தானே நிர்ணயித்துக்கொள்ளும் பொறுப்பு இந்தியா விடம் இருந்தது. யுத்தம் முடிந்த பின், புதுப்பிக்கப் படும் மாகாண சட்டசபைகளிலிருந்து ஓர் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்படுவதா யிருந்தது. இதற்குப்

பிரதிபலனுக, இந்தியர்கள் யுத்த முயற்சியில் பங்கெடுத்துக்கொண்டு ஒரு தேசிய சர்க்கார் அமைக்கவேண்டும். ஆனல் இந்த தேசிய சர்க்கார் சட்டசபைக்குப் பொறுப்பா யிருக்காமல் வைஸ்ராய்க்கு மட்டுமே பொறுப்பா யிருக்கும். யுத்தம் நடத்துவதன் முழு அதிகாரமும் தளபதி கையிலேயே இருக்குமென்ற போதிலும், தற்காப்பு இலாகாவில் அடங்கிய சில உட்பிரிவுகளின் மேற்பார்வை, ஒரு தற்காப்பு அங்கத்தினரிடம் ஒப்புவிக்கப்படும் என்று பேச்சுவார்த்தைகளின் போது விளக்கப்பட்டது. இது காங்கிரஸைத் திருப்தி செய்யவில்லை. தற்காப்பு அங்கத்தினரிடம் ஒப்புவிக்கப்படும் இலாகாக்களில் எவ்வித திருத்தமும் செய்ய கிரிப்ஸ் சம்மதிக்கவுமில்லை. தற்காப்பு அங்கத்தினர் அதிகாரங்களை விரிவாக்க மறுத்ததாலும், மந்திரிசபை சட்டசபைக்குப் பொறுப்பா யிருக்கவேண்டுமென்று ஏற்படுத்த மறுத்ததாலும் சம்பாஷணைகள் முறிந்தன. லண்டன் தேவதைகள் கிரிப்ஸை பின்புறமிருந்து குத்திவிட்டனரென்றும், சமரச சம்பாஷணையில் அவருக்கு முதலில் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் பின்னர் குறைக்கப்பட்டுவிட்டதென்றும், அப்பொழுது பேசிக்கொண்டார்கள். எப்படி யிருந்தபோதிலும் கிரிப்ஸ் தூது முறிந்தது. முறிவின் பழியை காந்திஜி மீதும் காங்கிரஸ் மீதும் கிரிப்ஸ் சுமத்தினர். இதுவரை எங்கும் எப்பொழுதும் கண்டிராத அடக்குமுறையை இந்தியா அனுபவிக்க வேண்டிவரும் என்று அவர், இங்கிலாந்துக்குப் புறப்படுமுன் இரண்டு இந்தியர்களிடம் எச்சரித்துவிட்டுச் சென்றார்.

## 9. பொதுஜனப் புரட்சி

இத்துடன் தொடங்குகிறது, பொதுஜனப் புரட்சிப் பருவம். கிரிப்ஸ் தூதுக்குப் பின், ஒரு காலி சூழ்நிலையேற்பட்டிருந்தது. காலியா யிருப்பது எப்படி இயற்கைக்கு விரோதமோ, அப்படியேதான் அரசியலுக்கும். காலியாயிருந்த இடத்தில் குடிகொண்டது ஆவேசப் புரட்சி வேகம். பிரிட்டிஷார் கையில் அதிகாரம் இருந்தவரை, இந்நாட்டிற்கு விமோசனம் ஏற்படாது என்பதை காந்திஜி உணர்ந்தார். வகுப்பு ஒற்றுமை ஏற்பட்ட பின்தான் சுயராஜ்யம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர் மாற்றிக்கொள்ளவேண்டியதாயிற்று. முதலில் பிரிட்டன் வெளியேறவேண்டுமென்று சவால்விட்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி முடியவேண்டுமென்று கூறினர். யுத்த நிமித்தங்களை முன்னிட்டு நாட்டில் அமெரிக்கத் துருப்புகளை வைத்துக்கொள்ளலாம் என்று மட்டும் அனுமதித்தார். ஆனல் தமது சத்யாக்ரஹ தர்மத்துக்கிணங்க, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பொதுஜன சட்டமறுப்பு நடக்கவேண்டுமென்று அவர் கூறினர். 1942 ஆகஸ்ட் 8-ந் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. தேசத்தின் கோரிக்கை அத்தீர்மானத்தில் அடங்கியிருந்தது. (1) இந்தியா யுத்த முயற்சியில் பங்கெடுத்துக்கொண்டு, ஆத்மீக ஆதரவுடன், ஆள்பலமும், நிதி, சாதன சகாயமும் செய்யவேண்டுமென்ருல், தான் சுதந்திர தேசம் என்று உணரும் நிலையை இந்தியா அடையவேண்டும். (2) பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டிருக்கும் எல்லா நாடுகளின் விடுதலைக்கும் இந்திய விடுதலை

அடிகோலவேண்டும். இவ்விரண்டுக்கும் ஒத்துக்கொள்ளாவிடில், பொதுஜன சட்டமறுப்பு இயக்கம் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லையென்று காங்கிரஸ் கமிட்டி தெளிவுபடுத்தியது. அதே சமயத்தில், வைஸ்ராயைச் சந்தித்துப் பேசுவதற்கு முன் இயக்கம் ஆரம்பிக்கப்படாது என்று இயக்கத்தின் தளபதியாக காந்திஜி விளக்கினர். உடனே வைஸ்ராயை சந்திக்கப்போவதாகவும் காந்திஜி அறிவித்தார். ஆனல் 8-ந் தேதி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டமாத்திரத்தில், 9-ந் தேதி பொழுதுபுலரும் முன்பாகவே, மகாத்மா காந்தியும், காரியக் கமிட்டி அங்கத்தினர்களும், இதர தலைவர்களும் கூட்டோடு கைது செய்யப்பட்டனர். தலைவர்களையெல்லாம் பிரத்தியேக ரயிலில் ஏற்றி அனுப்பி விட்டனர். புனவிற்கருகில், ஆகாகான் மாளிகையென்று சொல்லப்பட்ட பழைய பாழடைந்த குட்டிச்சுவரான கட்டிடத்திற்குக் காந்திஜி அழைத்துச் செல்லப்பட்டார். அந்த இடம் பேய்கள் குடியிருக்கலாயக்கானதேயொழிய, புனிதர்கள் வாழ்வதற்கேற்றதல்ல. காரியக் கமிட்டி அங்கத்தினர்களை அஹ்மதாபாத் கோட்டையில் அடைத்து வைத்தனர். மற்ற தலைவர்களைத் தற்காலிகமாக யெரவாடா சிறைக்கு அனுப்பினர். காரியக் கமிட்டியினர் எந்த இடத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதே 1944 பிப்ரவரி 22-ந் தேதிவரை யாருக்கும் தெரியாத ரகசியமாகவிருந்தது. மற்றவர்கள் மீது பாய்வதற்கும் சர்க்கார் திட்டம் போட்டு, தாங்கள் கைது செய்யவேண்டியவர்களை மூன்று தரத்தினராகப் பிரிததனர். பம்பாயில் 9-ந் தேதியே கைது செய்யப்படவேண்டியவர்கள் ஒரு தரத்தினர்; பம்பாயிலிருந்து திரும்பி, அவரவர்கள் ஊருக்

குப் போகும் வழியில், ரயில்களிலேயே கைது செய்யப்படவேண்டியவர் ஒரு தரத்தினர்; வீடுகளில் கைது செய்யப்படவேண்டியவர் மூன்றுவது தரத்தினர். காந்திஜியும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் கைது செய்யப்பட்ட செய்தி காட்டுத்தீபோல் பரவியது. 1919-ல் அமிர்தசரசில் நடந்த ஜலியன்வாலாபாக் அட்டூழியத்திற்குப் பின், காந்திஜி பாஞ்சாலத்துக்குச் செல்லுகையில், டில்லிக்கு 60 மைல் தூரத்திலிருந்த பால்வால் என்ற ஸ்டேஷனிலேயே கைது செய்யப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டபோது நாட்டு மக்களுக்கு என்ன ஆத்திரம் வந்ததோ, அதை யொத்த ஆவேசம் 1942லும் எழுந்தது. பம்பாயிலும், இந்தியாவின் இதர முக்கிய நகரங்களிலும் கொதித்தெழுந்து கூடிய மக்களைக் கலைக்க குண்டாந்தடிகள் மட்டுமல்ல, ஈட்டி, துப்பாக்கி, யந்திர பீரங்கி ஆகியவையும் உபயோகிக்கப் பட்டன. மக்களின் ஆவேசம் ஆழம் காண முடியாதது; அளவு காண அடங்காதது; மூண்டு கொண்டிருந்த தீ பற்றி எரியக் காத்துக் கொண்டிருந்தது. சர்க்காரின் மிருகத்தனமான பலாத்காரம் இந்தக் கனலை எழுப்பி விட்டது, கனல் விரைவில் காட்டுத் தீ போல் எரிந்தது. மக்களைக் கட்டுப்படுத்தும் தலைவர்களோ சிறையி லடைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் மக்களின் உணர்ச்சி கட்டுக்கு மீறிப், பீறிட்டுப் பாய்ந்தது. சர்க்கார் பொது ஜனங்கள் மீது குண்டுகளைப் பொழிந்தனர். பொது மக்களும் பதிலுக்குச் சூரையாடத் தொடங்கினர். 1919ல், பொது மக்கள் ஆத்திரம் கொண்டெழுந்து விட்ட பொழுது எழுதப்பட்ட சரித்திரமே 1942லும் தீப் பொறியில் பொறிக்கப்பட்டது. ரயில்வே ஸ்டேஷன்களும் சர்க்

கார் காரியாலயங்களும் கொளுத்தப் பட்டன ; ரயில்கள் நிறுத்தப்பட்டன. சில இடங்களிற் தண்டவாளங்கள் பெயர்க்கப் பட்டு விட்டன ; ஆனால் அங்கும் உயிர்ச் சேதம் மட்டும் ஏற்படவில்லை. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன ; போக்குவரத்து தடை செய்யப் பட்டது ; நகரங்கள் வெளியிடங்களுடன் தொடர்பில்லாமல் துண்டிக்கப் பட்டன.

கஜானக்கள் கொள்ளை யடிக்கப்பட்டன ; சர்க்கார் காரியாலயங்கள்மீது தேசியக் கொடிகள் நாட்டப் பட்டன. சில இடங்களில் அதிகாரிகளும் கொலை செய்யப் பட்டனர். இவற்றை அடக்க சர்க்கார் கையாண்ட வழிகளோ கயமையின் எல்லையையும் கடந்து விட்டன. வீடுகளுக்குத் தீ வைக்கப் பட்டது ; ஜனங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. வங்காளத்தில் 3 இடங்களிலும், பீஹாரில் ஒரு இடத்திலும், ஒரிஸாவில் ஒரு இடத்திலுமாக ஆகாய விமானங்களிலிருந்து யந்திர பீரங்கிகளைக் கொண்டு மக்கள் மீது சுட்டனர். ஒரு இடத்தில், நிரபராதிகளாய், தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்த ரயில்வே தண்டவாள வேலை கூலியாட்கள்மீது குண்டுகள் வீசப்பட்டன. சர்க்காரும் மக்களும் ஒருவர் மீது ஒருவர் சுமத்திய குற்றச் சாட்டுகளையும் கொடுமைகளையும் கணக்கிடுவதே அரிது. 1942 செப்டம்பரில் பார்லிமெண்ட் கூடி, இந்தியாவில் மாகாண சர்க்கார்களும் மத்திய அரசாங்கமும் எடுத்திருந்த நடவடிக்கைகளை அங்கீகரித்தது. இந்தியாவில் காங்கிரஸுக்குப் பலமோ பொது ஜன ஆதரவோ எள்ளளவும் கிடையாது என்பதை நிரூபிக்க முயன்றார் சர்ச்சில். காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் தங்கள் பாபத்தை உணர்ந்து, மன்னிப்புக்கு மன்

ருடி, பிராயச்சித்தம் புரிய வேண்டுமென்று கூறினர் இந்திய மந்திரி ஏமரி! காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் தேசப் பிரஷ்டைகளென்றும், அவர்களை விடுதலை செய்வதற்கோ அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கோ இடமில்லை யென்றும், அவர்கள் இதுவரை செய்த தவறுகளுக்கு மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டு, யுத்த முயற்சியில் தங்கள் கடமைகளைச் செய்வதாக உறுதி மொழி தருவதோடு மட்டுமல்லாமல், வருங்காலத்திலும் நன்னடத்தையி லிருந்து வழுவாம லிருப்பதாக உத்தரவாதமும் தரவேண்டுமென்றும் ஏமரி காமன்ஸ் சபையிலும் பொதுக் கூட்டங்களிலும் வற்புறுத்திப் பேசினர். காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்து அவர்களுடன் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துவது, காங்கிரஸ் நலனையும், பிரிட்டிஷார் நலனையும் முன்னிட்டு மிகவும் அவசியம் என்பதை பிரிட்டிஷ் லிபரல், தொழிற் கட்சிப் பத்திரிகைகள் மட்டும் வற்புறுத்தி வந்தன. ஆனல் ஆளும் வர்க்கத்தினர் அதற்கு செவி சாய்க்கவில்லை.

இங்கிலேயில் 6 மாதம் பாதுகாப்பில் இருந்தபின், மகாத்மா காந்தி 21 நாள் உபவாசம் தொடங்கினர், அது சாகும் வரையில் உபவாசமல்ல வென்றும் தமக்குச் சாக விருப்பமில்லை யென்றும் அவர் விளக்கினர். இந்திய சர்க்காருக்கும், வைஸ்ராய்க்கும் தமது உத்தேசத்தைக் கடிதம் மூலம் தெரிவித்தபின், 1943 பிப் 10ந் தேதி அவர் தமது உபவாசத்தை ஆரம்பித்தார். ஒரு பலாத்கார இயக்கம் தொடங்கிவிட்டு, அதன் விளைவுகளி லிருந்து தப்பித்துக் கொள்ள உண்ணு விரதம் மூலம் மரணத்தை கோழைத் தனமாக நாடுகிறர் என்று காந்திஜி மீது வைஸ்ராய் குற்றம் சாட்டினர்

தாங்கள் செய்த பாபங்களின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள எல்லா கோழைகளும் இந்த வழியைக் கையாண்டால் எவ்வளவு உத்தம மாயிருக்கும்? முந்திய உண்ணு விரதங்களைவிட, இம்முறை காந்திஜி அதிக கஷ்டத்தை சகித்துக்கொள்ள வேண்டி யிருந்தது. அவர் வாழ்க்கையில் அது 14வது உபவாசம். அப்பொழுது அவர் வயதோ 73. முதுமையின் காரணமாய் உபவாசத்தைத் தாங்குவது மிகவும் சிரமமா யிருந்தது. உபவாசத்தைப் பற்றிப் பலபேர் பல வகையில் வியாக்கியானம் செய்தார்கள். மூன்று வாரங்களும் பரபரப்புடனும் கவலையுடனும் கவனித்தபின், உண்ணு விரதம் தனது லக்ஷியத்தை அடையாது தோற்றுவிட்டதென்று பிரிட்டனும் அமெரிக்காவும் கூறின. ஆனால், அவர்கள் உபவாசத்தின் நோக்கத்தை அறிந்து கொள்ளவில்லை யென்பதுதான் உண்மை. உபவாசத்தின் மூலம் பிரிட்டனை காங்கிரஸுக்குப் பணிய வைக்க காந்திஜி விரும்பவில்லை. ஆகாகான் மாளிகையில் காந்திஜி உயிருடன் புதைக்கப் பட்டிருந்த நிலையில், தமது கௌரவத்தையும், காங்கிரஸ் கௌரவத்தையும் காத்துக் கொள்ளவும், சர்க்கார் நடவடிக்கைகளுக்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கவும், உபவாசம் மேற்கொள்வதைத் தவிர காந்திஜீக்கு வேறு வழி யில்லாது போயிற்று; 1943 மார்ச் 3ந் தேதி உபவாசம் முடிந்தது. பின்னர் சர்க்காரின் அடக்கு முறை தர்பாரும் தொடர்ந்து நடந்தது.

இவ்வாருக, வாரங்கள், மாதங்கள், வருடங்கள் கழிந்தன. பிரிட்டிஷ் மனச் சாட்சி, கடமையையோ நீதியையோ உணரும் என்பதற்கு அறிகுறி யெதுவுமில்லை. கவர்னர்களின் பிரகடனங்களை ஒவ்வொரு

வருஷமும் நீடிக்க வேண்டி யிருந்ததால், காமன்ஸ் சபையில் இந்திய விவகாரங்களை வருஷத்துக் கொரு முறை ஆலோசிக்க வாய்ப்பு இருந்தது. காங்கிரஸ் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் பற்றியே ஒவ்வொரு வருஷமும், பார்லிமெண்டில் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் பல்லவி பாடி வந்தனர். அமெரிக்க பத்திரிகைகளிற் சில காங்கிரஸ் கொள்கைகளுக்கு ஆதரவாயிருந்தன. பிரிட்டன் தனது கொள்கையை மாற்ற வேண்டுமென்று அவை வற்புறுத்தின. ஜனதிபதி ரூஸ்வெல்டின் தூதர், வில்லியம் பிலிப்ஸ் காந்திஜியை பேட்டி காண விரும்பினர். ஆனல் இந்திய சர்க்கார் அனுமதி மறுத்தது. அவர் ரூஸ்வெல்டிடம் சமர்ப்பித்த அறிக்கைகளில் சில பகுதிகள் பின்னர் வெளியே தெரியலாயின. அவர் கருத்துக்கள் எவ்வளவு முற்போக்கா யிருந்தன என்பது அதிலிருந்து வெளியாயிற்று. ஆனல் அத்தகைய முற்போக்கு அரசியல் வாதிகளை பிரிட்டன் மதிக்கவில்லை. பிரிட்டனின் ஏகாதிபத்தியக் கொள்கையில் இருந்த ஊழலை வெளிப்படுத்த ரூஸ்வெல்டுக்கும் வாயில்லாமல் போயிற்று. ஏனென்ருல் அமெரிக்கா பின்பற்றி வந்த கொள்கையிலும் அக் களங்கம் இல்லாமலில்லை. இந்தியாவின் சார்பில் சீன தலையிட்டது. ஆனல் சீனவின் உள் நாட்டு நிலைமையே மிகவும் பலவீனமாக இருந்ததால் பிரிட்டனைப் போன்ற ஏகாதிபத்திய வல்லரசை எதிர்த்து ஒன்றும் பேச முடியவில்லை. ரஷ்யா தன் குரலை அடிக்கடி எழுப்ப வில்லை; கருத்தை வெளியிட்ட நேரத்திலெல்லாம் உறுதியுடன் தான் வெளியிட்டது. ஆனல் ரஷ்யாவாலும் எதையும் வற்புறுத்திச் சொல்ல இடமில்லாமல் போனது. கிரிப்ஸ் திட்டம் தருவதற்குக் காரணம் அமெரிக்கர்

செல்வாக் கென்றும் அதன் பின்னுல் சிம்லா மகாநாட்டைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எல்லாம் ரஷ்யர் வற்புறுத்தலால் எடுத்துக் கொள்ளப் பட்டவை யென்றும் சொல்லிக் கொண்டார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையென்று யாரும் மதிப்பிட முடியாது.

ஆனால் காலம் கடந்துகொண்டு செல்லவே, இந்தியாவில் ஏற்பட்டிருந்த நெருக்கடி பற்றி பிரிட்டனுக்கும் கவலை அதிகரித்தது. இந்திய அரசியல் தலைவர்கள் பணிந்து வந்து மன்னிப்பு கேட்டு சரணாகதி யடைவார்கள் என்று எதிர்பார்த்த பிரிட்டன், காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் கொள்கையில் இன்னும் உறுதியாயிருப்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தது. 1940 மே மாதத்தில், ஜெட்லந்து பிரபு விலகவே ஏமரி இந்தியா மந்திரி ஸ்தானத்துக்கு வந்திருந்தார். ஆதே சமயத்தில், சேம்பர்லனுக்குப் பதிலாக சர்ச்சில் அதிகாரத்துக்கு வந்திருந்தார். காரிய கமிட்டியினரை ஒதுக்கிவிட்டு, மற்ற இந்தியத் தலைவர்கள் ஒன்று கூடி சுயேச்சையாக ஆலோசனை நடத்தி, தங்க்ள் வருங்கால அரசியல் திட்டம் பற்றி முடிவுகளுக்கு வரவேண்டுமென்று ஏமரி ஓயாமல் கூறி வந்தார். இந்தியாவின் வருங்கால அரசியல் சட்டம் பிரிட்டனின் சட்டத்தைப் பின்பற்றியிராமல், அமெரிக்கா, ஸ்விட்ஜர்லாந்து ஆகிய நாடுகளின் சட்டத்தை அனுசரித்து அமைக்கப்பட வேண்டுமென்றும் ஏமரி கூறினுர். அதாவது பொறுப்பாட்சி என்பதிலெல்லாம் குழப்பிக்கொண்டிராமல், வாஷிங்டனிலும் ஜெனீவாவிலும் இருந்ததுபோல் நிரந்தர நிர்வாகஸ்தர்களைக்கொண்டு இந்திய நிர்வாகம் நடக்க வேண்டுமென்பதுதான் அவர் சொன்னதன் உண்மை தாத்பரியம். சிறைக்கு வெளியிலிருந்தவர்களும், பல்

கலைக் கழகப் பயிற்சி பெற்ற இள அறிஞர்களும் ஒன்று கூடி இந்திய அரசியலை வகுக்க முயற்சிக்க வேண்டுமென்று ஏமரி இடித்துக் கொண்டே வந்தார். ஆனல் இந்தியாவோ அவரைப் பொருட்படுத்தவில்லை. காரியக் கமிட்டி அங்கத்தினர்களை விடுதலைசெய்து நாட்டின் உண்மைத் தலைவர்களான அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்க வேண்டுமென்று இந்தியர்கள் உறுதியாகக் கூறி வந்தனர். முஸ்லீம் லீக் மட்டுமே இதற்கு விலக்காய் இருந்தது. இந்தியாவிடம் அதிகாரத்தை ஒப்புவித்து விட தாங்கள் தயாரென்றும், ஆனல் யாரிடம் ஒப்புவிப்பதென்று தெரியாமல் தான் திகைத்துக் கொண்டிருப்பதாகவும், ஏமரி, சர்ச்சில் மட்டுமல்ல, கன்ஸர்வேடிவ், லிபரல், தொழிற் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகள் கோஷ்டி முழுவதும் கூறி வந்தது. தேசிய சர்க்கார் அமைப்பு மட்டுமல்ல, வருங்கால அரசியல் திட்டத்தை வகுக்கும் அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் முறை, கொள்கை முதலியவை பற்றியும் இந்தியரிடை ஒருமித்த கருத்தும் ஏக மனதான முடிவும் இருக்கவேண்டுமென்று அவர்கள் கூறி வந்தார்கள்.

1944 மே மாதத்தில், மகாத்மா காந்தி உடல் நலம் குன்றியது. அவர் உடல்நிலை பற்றி கவலைக்கிடம் ஏற்படவே மே மாதம் 6ந் தேதி அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆகஸ்ட் தீர்மானத்தில், பொதுஜன சட்ட மறுப்பு தொடங்குவது பற்றிய அமல் முறை ஷரத்துக்கள் இப்பொழுது பொருந்தா வென்றும், 1944-ம் வருஷத்திலிருந்து கொண்டு 42க்கு மீண்டும் செல்வது சாத்தியமில்லை யென்றும் காந்திஜீ உடனே தெளிவு படுத்தினர். ஆயினும் தீர்மானத்தில் அடங்கி

யிருந்த தேசிய கோரிக்கையை மாற்றுவதற் கில்லை யென்றும், அதில் ஓரெழுத்தையும் அசைக்க முடியா தென்பதையும் அவர் வலியுறுத்தினர். "நியூஸ் கிரோனிக்கிள்" நிருபர் கெல்டருக் களித்த பேட்டியில் காந்திஜி சமரச திட்ட மொன்றைத் தந்தார். ஆனாலும் அதிகாரிகளிடம் சமரச ஆர்வமில்லை. இந்தியாவில், லின்லித்கோவுக்குப் பின் வைஸ்ராயாய் வந்த வேவல். பழைய பிரிட்டிஷ் பல்லவிகளையே பாடினர். காந்தி-ஜின்னு சம்பாஷணைகள் தொடங்கும் தறுவாயில் (1944 ஆகஸ்ட் 15 ந்தேதி) வைஸ்ராய், காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில், காங்கிரசும் லீகும் மட்டும் கூடினுல் போதா தென்றும், முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ருல் நாட்டின் முக்கிய கட்சிகள் எல்லாவற்றிடையும் ஒற்றுமை ஏற்பட வேண்டியதவசியம் என்றும் கூறினர். 1944 செப்டம்பரில் காந்தி-ஜின்னு சம்பாஷணைகள் முறிந்தன; ஒற்றுமை யில்லாதவரை முன்னேற்றத்திற்கே இடமில்லை யென்ற பிரிட்டிஷ் குதர்க்கத்திற்கு மேலும் ஒரு வாய்ப்பு கிடைத்தது.

இந் நிலையில் ஐரோப்பாவில் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. ஜெர்மனி முறியுந் தறுவாயில் இருந்தது. ஐரோப்பிய யுத்தம் முடிவுற்றதால், இந்திய அரசியல் நிலைமைபற்றிப் புனராலோசனை செய்யவேண்டிய அவசியத்தை சர்ச்சில் சர்க்கார் உணர்ந்தனர்.

1945 மார்ச் 23ந் தேதி, மத்திய அசெம்பிளி பட்ஜெட் விவாதம் நடந்துகொண்டிருக்கையிலேயே வேவல் திடீரென லண்டனுக்குப் பறந்து சென்ருர். இந்தியப் பிரச்னைமீது இந்தியா மந்திரியுடன் சம்பாஷணை செய்ய விரும்புவதாக 1944 செப்டம்பரிலேயே

வேவல் தெரிவித்திருந்ததாகவும், லண்டன் விஜயத்தை ஒத்திவைக்குமாறு இந்தியா மந்திரிதான் கூறியதாக வும், லண்டனிலிருந்து வியாக்கியானம் வந்தது. சமரச சம்பாஷணைகள் நடத்த 1945 மார்ச்சு நல்ல முகூர்த்தம் என்ற கருதப்பட்டது போலும். லண்டனிலிருந்து திரும்பிய பின், ஜூன் 14ந் தேதி வேவல் ஒரு ஒலி பரப்புப் பிரசங்கம் செய்தார். பிரிட்டிஷ் சர்க்கார் பின் பற்றப் போகும் கொள்கையைப் பறைசாற்றிவிட்டுக் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்களென்றும் அவர் அறிவித்தார். அந்த அறிவிப்பையும் அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சி களையும் இக் கட்டத்தில் கவனிப்போம்.

காங்கிரஸைப் பாரிசத்தில் தாண்டி, அதன் சத்யாக்ரஹப் போராட்டத்தைப் புறக்கணிக்க வேண்டு மென்பதே சர்க்கார் வெகுகாலமாகப் பின்பற்றி வரும் கொள்கை. 1942 ஆகஸ்டில் தொடங்குவதாகத் தீர் மானிக்கப்பட்டிருந்த இயக்கம் காங்கிரசின் நான் காவது இயக்கம். 1920-ல், இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது ஒரு கிளர்ச்சி நடந்தது. முப்ப தாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். 1921 டிஸம் பரில் காந்தி-ரீடிங் சமரசப் பேச்சுகளும் லிட்டன்-தாஸ் சம்பாஷணைகளும் நடந்தன. இவை அநேகமாய் வெற்றி கரமாய் முடிந்திருக்கும். ஆனால், அலி சகோதரர்களை விடுதலை செய்யவேண்டுமென்று காந்திஜி வற் புறுத்தினர்; வைஸ்ராய் இணங்கவில்லை. “வட்ட மேஜை மகா நாட்டுக்குப் பிரதிநிதிகளாக, அலி சகோ தரர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள்; அப்படி யானால் சர்க்கார் அவர்களை விடுதலை செய்து தானே

ஆகவேண்டும்" என்று அவர் காந்திஜிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார் !

1930-ல் நடந்த உப்பு சத்யாக்ரஹம் இரண்டாவது தேசிய கிளர்ச்சி. 1931 மார்ச் 5ந் தேதி கையெழுத்திடப்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தத்துடன், அக் கிளர்ச்சி முடிந்தது. ஆனாலும் அதிகாரவர்க்கம் அந்த ஒப்பந்தத்தை மீறுவதென்று முடிவு செய்திருந்தது. அதைக் கையெழுத்திட்ட மறுகணமே, அதை மீறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளப்பட்டன. புது வைஸ்ராயாக வந்த வில்லிங்டன், இர்வின் கொள்கையை மாற்றி 32-34 வருஷங்களில் நடந்த அடக்குமுறை தர்பாரை மீண்டும் அமலில் கொண்டு வந்தார். அப்படி யிருந்தும், 1934.ல் மத்திய அசெம்பிளிக்கு நடந்த தேர்தல்களில் காங்கிரசுக்கு அமோக வெற்றி கிடைத்தது. 1940 - 41-ல், யுத்தக் கொள்கைகள் பற்றிப் பிரிட்டன் இந்தியாவுக்கு சரியான பதில் கூறுதபோது மூன்ருவது இயக்கம் நடந்தது. யுத்த முயற்சியில் பங்கெடுத்துக் கொள்வது சம்பந்தமாக முழு பேச்சு சுதந்திரம் இந்தியாவுக்குத் தரவேண்டுமென்ற கோரிக்கையின் மீது அந்த் இயக்கம் நடந்தது. 1941 டிஸம்பரில் அந்த இயக்கம் முடிந்தது. கிரிப்ஸ் விஜயம் தொடர்ந்தது. கிரிப்ஸ் தூது முறிந்த போதிலும், அத்தூதை அனுப்பும் அளவிற்குச் சர்ச்சில் பணிந்ததே 40-41-ம் வருஷ இயக்கத்தின் வெற்றி தான் என்பதை அனைவரும் உணர்ந்தனர். இம் மூன்று இயக்கங்களின் வெற்றிக்குப் பின்னும், இந்திய அரசியலில் இனியும் சத்யாக்ரஹ இயக்கம் நடக்க இடம் கொடுக்கக் கூடாதென்று சர்க்கார் முடிவு செய்தனர், ஆகவே தான் 42-45 இயக்கம் எழுவதற்கு

முன்பே அதை அடக்கிவிட சர்க்கார் தீர்மானித்தது. ஆனல் சர்ச்சில், ஏமரி, வேவல் ஆகியோர் தங்கள் மூர்க்கப் பிடிவாதத்திற்கும் மேம்பட்ட ஒரு சக்திக்குப் பணிந்து 1945 ஜூன் 15ந் தேதி காரியக் கமிட்டி அங்கத்தினர்களை விடுதலை செய்து, 'சட்ட பிரஷ்டம்' செய்யப்பட்ட காங்கிரசுடனும், மற்ற கட்சிகளுடனும், சமரசப் பேச்சு வார்த்தைகள் தொடங்கி தேசிய சர்க்கார் அமைக்க முயற்சி செய்யவேண்டிய தாயிற்று.

## 10. போராடினேம் ; போராடுவோம் ; வெற்றிக்கு வழி அதுவே

காங்கிரஸ் உறுதியுடன் கடைப் பிடித்து வந்த உன்னதக் கொள்கைகளாலும், அவற்றைப் பின்பற்றி மிகுந்த விவேகத்துடன் வகுக்கப்பட்ட வேலைத் திட்டங்களாலும் தான், இவ்வளவு மகத்தான காரியங்களைச் சாதிக்க முடிந்தது. இந் நாட்டில் இருக்கும் பிரிட்டிஷாரோ மிகச் சிலரே. சமீப காலம் வரை, இந்தியாவில் 1200 பிரிட்டிஷ் அதிகாரிகள் இருந்தனர். இப்பொழுதோ சுமார் 600 பேர்தான் பிரிட்டிஷ் அதிகாரிகள். நாட்டில் அதிகாரத்தை நிலைநாட்டிப் பாதுகாக்க 61000 பிரிட்டிஷ் பட்டாளத்துக்காரர் கொண்ட சேனை ஒன்று இங்கிருக்கிறது. இச் சிலரைக் கொண்டுதான் அவர்கள் நாட்டை ஆண்டு வருகின்றனர். அறிவுத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தித் தங்கள் ஆட்சிக்கு அனுசரணையான மனப்பான்மையை மக்களிடம் புகுத்தியுள்ளது, அவர்களுக்கு ஓரளவிற்கு உதவுகிறது. ஒரு முனையிலிருந்து மற்ெருரு முனை வரை, ஆளும் வர்க்கம் மிகவும் கட்டுப்பாடாக வேலை

செய்வதும் ஆட்சிமுறைக்கு அனுகூலமா யிருக்கிறது. இந்தியா மந்திரியின் உத்தரவுகள், கம்பியில்லாத் தந்தி மூலம வைஸ்ராய்க்கு அனுப்பப்படுகின்றன. அதன் பின்னர் தந்திமூலம் ஒவ்வொரு மாகாண கவர்னருக்கும் அனுப்பப் படுகின்றன; கவர்னர்கள் கலெக்டர்களுக்கு அனுப்புகின்றனர்; அங்கிருந்து இன்னும் கீழிருக்கும் அதிகாரிகளுக்குச் செல்கின்றன. இவ்வாறு மிஞ்சிப்போனுல் ஒரு வாரத்திற்குள்ளாக, எல்லா உத்தரவுகளும் கிராமங்களில் போய் கிடைத்து விடுகின்றன. இவ் வுத்தரவுகள் உடனே அமலில் கொண்டு வரப்படுகின்றன. பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி செலுத்துகிறது என்பதன் தாத்பரியம் இது தான். நாமும் சுதந்திரம் பெற வேண்டுமானுல், இதை யொத்த ஒரு கட்டுப்பாடான ஆட்சிமுறை யேற்படுத்த வேண்டும். காங்கிரசின் உத்தரவுகள், நமது இந்தியா மந்திரியான காந்திஜியிட மிருந்து, நமது வைஸ்ராயான காங்கிரஸ் தலைவருக்கு வந்து சேரவேண்டும். அவரிட மிருந்து நம்முடைய கவர்னர்களான மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களுக்கு உத்தரவு வரவேண்டும். அவர்களிட மிருந்து ஜில்லா தலைவர்களான ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களுக்கு வரவேண்டும். பின்னர் தாலுகா, பிர்க்கா, கிராமம் என்ற வாரியாக ஒழுங்காகச் செல்லவேண்டும். அதே போல் கீழிருந்து கிராமப் பட்டேலிட மிருந்து ஆரம்பித்து, ரிவனியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், டெபுடி கலெக்டர், கலக்டர், கவர்னர் என்ற முறையில் படிப்படியாகத் தகவல் செல்வது போலவே, கிராமத்திலிருந்து தொடங்கும் காங்கிரஸ் திட்டமோ, தகவலோ, கிராமக் கமிட்டியிலிருந்து, பிர்க்கா, தாலுகா, சப்டிவிஷன், மாகாண

கமிட்டிகளுக்குச் சென்று, இறுதியில் காங்கிரஸ் தலைவருக்கும் நம் இந்தியா மந்திரிக்கும் செல்லவேண்டும். இவ்வாறு தான் 60 வருஷங்களாக, காங்கிரஸ் ஒரு போட்டி சர்க்காரையே ஏற்படுத்தித், தேசிய சக்திகளை ஒன்று திரட்டி, சர்க்காரை எதிர்த்து, மகத்தான சுதந்திரப் போராட்டத்தில் நம் பலம் அனைத்தையும் ஈடுபடுத்தியுள்ளது. 60 ஆண்டுகளாக காங்கிரஸ் இவ்வாறு உழைத்த பின்னர், 1945-ல் இந்திய நெருக்கடியைத் தீர்க்கப் புது முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை சர்க்கார் உணர்ந்தது.

சிம்லா மகாநாட்டை ஒட்டிய சம்பவங்கள், மிகச் சமீப காலத்தில் நடந்ததால், அவற்றின் நினைவு நம் மனத்தை விட்டு அகன்றிருக்க முடியாது. அதன் முக்கிய அம்சங்கள் பற்றி மட்டும் ஓரிரண்டு வார்த்தைகள் கூறுவோம். சிம்லா மகாநாட்டில் சமரச முயற்சிகளில் காங்கிரஸ் பெரிதும் உதவியதென்றும், மகாநாடு தோற்றது மிகவும் வருந்தத்தக்கதென்றும், வேவலே வெளிப்படையாகவும், தயக்கமில்லாமலும், ஒத்துக் கொண்டுள்ளார். நிர்வாகக் கவுன்ஸிலுக்கு தமது ஜாப்தாவையும் தராமல், வைஸ்ராய் ஜாப்தாவையும் நிராகரித்த ஜின்னாமீது தான் மகாநாட்டின் பழி சாரும் என்பது. ஜுலை 14ந் தேதி வைஸ்ராய் செய்த முடிவுரையிலேயே தெளிவாக்கப்பட்டிருந்தது. முஸ்லிம்களுக்கு லீக் தான் ஏகப்பிரதிநிதி யென்ற கோரிக்கையை வைஸ்ராய் நிராகரித்ததுதான் சரி. சிம்லா மகாநாட்டில் கூடியிருந்த கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு, வைஸ்ராயிடம் ஒருமித்த ஜாப்தாவை அனுப்ப முடியாமற் போனது வருந்தத் தக்கதே. அவ்வாறு அவர்கள் செய்திருந்தால், சுதந்திரம் பெறுவதற்கு ஒருமித்த கருத்துடன் கூட்டு நட-

வடிக்கை எடுக்க வழி ஏற்பட்டிருக்கும். கொஞ்ச காலத்திற்குள் கூட்டுத் தொகுதித் தேர்தல் முறை ஏற்பட்டிருக்கவும் கூடும். தேசியத்தில் அனைத்தும் ஐக்யமாகியிருக்கும்; பொது லக்ஷியமான விடுதலைக்காக அனைவரும் பின்பற்றக் கூடிய வேலைத்திட்டம் ஏற்பட்டிருக்கக் கூடும். ஒருமித்த முயற்சியின் பலனாய் வெற்றி கிடைத்திருக்கும் என்பதுவும் திண்ணம். எப்பொழுது அனைவரும் சேர்ந்து ஒரு ஜாப்தா அனுப்ப முடியாமற் போயிற்றோ, அப்பொழுது, தனித்தனியாக அனுப்பப்படும் ஜாப்தாக்களாலும் பலனில்லை என்றாயிற்று. தாம் தேர்ந்தெடுத்திருந்த லீக் அங்கத்தினர்கள் ஜாப்தாவை வைஸ்ராய் ஜின்னாவுக்குக் காட்டாமல், முழு ஜாப்தாவையும் காங்கிரஸ் தலைவரிடம் காட்டியிருந்தால், காங்கிரஸ் தலைவரும் ஜாப்தாவை நிராகரித்திருப்பார்; முறிவின் பழியையும் காங்கிரஸ்மீது சுமத்தியிருக்கலாம். ஆனால் வைஸ்ராய் அப்படி ஒன்றும் செய்யவில்லை. தோல்விக்குத் தாமே பொறுப்பாளி என்று கூறிவிட்டு, சிம்லா மகாநாட்டைத் தொடர்ந்து, 1945 ஆகஸ்ட் 1, 2 தேதிகளில் கவர்னர்கள் மகாநாட்டைக் கூட்டி, தமது காரியத்தைக் கவனிக்கத் தொடங்கினார்.

இதற்கிடையில் இங்கிலாந்தில் பலமுக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. தொழிற்கட்சி சர்க்கார் ஆக்ஷேபத்தையும் பொருட்படுத்தாமல், 1945 ஜூலை 5ந் தேதி, பொதுத் தேர்தல் நடத்தியே தீரும்படி சர்ச்சில் வற்புறுத்தினார். தேர்தலின் முடிவு, கன்ஸர்வேடிவ் கட்சிக்குத் திகைப்பை ஏற்படுத்தியது. தொழிற் கட்சி அங்கத்தினர்கள் 417 பேர் வெற்றி பெற்றனர்; கன்ஸர்வேடிவ் அங்கத்தினர்கள் எண்ணிக்கை 210-க்குக் குறைந்தது. மந்திரி சபையை அமைக்குமாறு, மன்னர், தொழிற்

கட்சித் தலைவர் அட்லியை அழைத்தார். ஜூலை 27ந் தேதி மந்திரி சபையும் அமைக்கப்பட்டது. காந்திஜியையும் காங்கிரஸையும் எதிர்த்து மூர்க்கத்தனமாகப் போராடிய சர்ச்சிலுக்குச் சரியான பாடம் கற்பிக்கப் பட்டது. 1940 மே 10ந் தேதி அதிகாரத்துக்கு வந்த சர்ச்சில் 1945 ஜூலை 27ந் தேதி வெளியேறினர். இந்த 5 ஆண்டுகள், 2 மாதங்களில், இந்திய இயக்கத்தையும் அதன் தலைவர் காந்திஜியையும் நசுக்கத் தம்மாலியன்ற தனைத்தையும் அவர் செய்து விட்டுச் சென்ருர். காந்திஜி சர்ச்சிலுக்கு எழுதியிருந்த கடைசிக் கடிதத்தில், தம்மை நசுக்க சர்ச்சிலுக்கிருந்த ஆவல் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, இரு நாடுகளின் பொது நலனுக்குகந்த வழியில் சர்ச்சில் தம்மை பயன் படுத்தினுல் அது தமக்குச் சித்தமே என்று கூறியிருந்தார். சர்ச்சிலின் கதியை முடிவு கட்டி விட்ட மந்திரம் அக்கடிதமே என்று சொல்லலாம். அதிகாரம் தங்கள் கையில் வந்தால், இந்தியா மந்திரி காரியாலயத்தை மூடி, இந்திய விவகாரங்களைக் குடியேற்ற நாட்டுக் காரியாலயத்துக்கு மாற்றுவதாகத் தொழிற்கட்சி வாக்களித்திருந்தது. அந்த வாக்கு நிறை வேற்றப்படுமென்று எதிர்பார்க்கப் பட்டது.

காங்கிரஸ் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று 60 ஆண்டுகள் கடந்து விட்டன. தேசிய பார்லிமெண்டிற்கு அஸ்திவாரம் போட வெண்டுமென்ற நோக்கத்துடனேயே 1885ல் காங்கிரஸ் ஆரம்பிககப் பட்டது. அதில் காங்கிரஸ் வெற்றி யடைந்து விட்டது. முஸ்லிம்களில் பட்டதாரிகளும் பண மூட்டைகளும் வகுப்பு வாதப் புழுதியைக் கிளப்பி, இந்தியாவை இரு தனி ராஜ்யங்களாகப் பிரிக்க வேண்டுமென்று முயற்சி

செய்து வந்த போதிலும், இந்திய தேசிய கூட்டு ஐக்யத்தைக் காங்கிரஸ் ஏற்படுத்திவிட்ட தென்றே கூற வேண்டும். அரை நூற்றுண்டாக கிளர்ச்சியும் போராட்டமும் நடந்த பின்னர் கூடியதே சிம்லா மகாநாடு. மத்திய நிர்வாகத்தில் சம பங்கு வேண்டுமென்ற ஆசையே பாகிஸ்தான் கோஷத்தில் அடங்கி யிருக்கிற தென்பது அம் மகாநாட்டில் வெளியாயிற்று. வடக்கில் மன்னுமிமய மலேயும், மற்ற மூன்று பக்கங்களில் நீலத்திரைக் கடலும் எல்லேயாகக் கொண்டு விளங்கும் இந்தியா முழுவதும் ஒரே நாடு; ஒரே ஐக்யம்; சரித்திர ஒருமையும் இணைப்பும் பெற்றது; பொதுவான கலாசாரமும புராதன நாகரிகமும் கொண்ட ஒரே இனத்தவர் வாழும் நாடு; ஹிந்துஸ்தானியைப் பொது மொழியாக் கொண்ட நாடு; ஒரே நிர்வாக முறைக்குக் கட்டுப்பட்ட நாடு; என்ற உண்மைகள் இன்று தெளிவாகிவிட்டன. பொதுவான சுதந்திர லக்ஷியத்துக்காக அனேவரும் சேர்ந்து போராடுவதைச் சாத்திய மாக்கியது, காங்கிரஸின் 60 வருஷ உழைப்பு. விடுதலே பெற்றபின் நாட்டின் வருங்கால அமைப்பு என்னவாயிருக்க வேண்டுமென்பதையும் காங்கிரஸ் அடிக்கடி ஆலோசித்து வருகிறது.

காங்கிரஸ் தொடங்கிய காலத்திலிருந்து, சுதந்திர இந்தியாவின் தன்மையைக் குறிக்கப் பல சொற்கள் வழங்கி வந்ததுண்டு. முதலில் சீர்திருத்தம் வேண்டுமென்று கோரினேம்; பின்னர் குடியேற்ற நாட்டு ரீதியில் சுயாட்சி கேட்டோம்; பிறகு 'ஹோம் ரூல்' நிலே நாட்டக் கிளர்ச்சி செய்தோம்; சுயராஜ்யம் என்ற கோஷம் பிறகு முழங்கியது. இன்றே, பூர்ண சுதந்திரமே நமது கோரிக்கை. இச் சொற்ருடர் ஒவ்வொன்

றிற்கும் போட்டியாக, சர்க்கார் ஒன்றை சிருஷ்டி செய்துகொண்டே வந்தது. சீர்திருத்தம் வேண்டு மென்று நாம் கேட்டபோது, செம்மையான அரசாங்கத் தின் அவசியத்தை சர்க்கார் வற்புறுத்தினர். நாம் சுயாட்சி கேட்டபோது, அவர்கள் பிரதிநிதித்துவ ஆட்சி முறை பற்றிப் பேச்செடுத்தனர். நாம் 'ஹோம் ரூல் என்றபோது அவர்கள் பொறுப்பாட்சி தருவ தாகக் கூறினார்கள். காங்கிரஸ் சுயராஜ்யம் கோரிய போது, இந்த அரசியல் மாறுதல்களிலேயே டொமினி யன் அந்தஸ்து உள்ளே பொதிந்து கிடக்கின்றது என்று வியாக்கியானம் செய்தனர் சர்க்கார். பூர்ண சுதந்திரமே நமது இறுதி லக்ஷியம் என்று நாம் போர் முரசு கொட் டிய போது, வெஸ்ட்மினிஸ்டர் சாசனப்படி டொமினி யன் அந்தஸ்து தருவதாக 1940ல் 'ஓரியன்ட் கிளப்பில், செய்த பிரசங்கத்தில் வைஸ்ராய் அறிவித்தார். 'பிரிட் டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளாக, சம, சுதந்திரப் பங்காளி அந்தஸ்தை' இந்தியாவுக்கு தருவதாக ஏமரி பறை சாற்றினர். 1940 ஆகஸ்ட் 14ந்தேதி ஏமரி பார்லிமெண் டில் செய்த அரிய பிரசங்கத்தில் பின்வருமாறு கூறினர். "டொமினியன் அந்தஸ்து என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற் குள் சம, சுதந்திர பங்காளி அந்தஸ்து என்றே நான் அதைக் குறிப்பிட விரும்புகின்றேன். டொமினியன் அந்தஸ்து, பூர்ண சுதந்திரத்துக்குக் குறைந்த அல்லது தாழ்ந்த நிலையென்று சாதாரணமாய்த் தோன்றுவ துண்டு. ஆனால் உண்மையில் அவ்வாறில்லை. நம் அதி காரம் மற்ற நாடுகளை விட ஓங்கியது என்ற போதிலும் நாமும் அதே அந்தஸ்தில் தானிருக்கிறோம். சுதந்திர நாட்டாகத் தனித்து நிற்பதைவிட, சாம்ராஜ்யத்தில் சம

பங்காளியாக விருப்பது மேன்மையான நிலையே" என்று கூறினர் ஏமரி. இறுதியில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தி விருப்பதோ, அதிலிருந்து விலகுவதோ இந்தியாவின் இஷ்டத்தைப் பொறுத்தது என்று கிரிப்ஸ் அறிவித்தார்.

இனி, டொமினியன் கொள்கை உருவெடுத்த விதத்தைச் சற்று காண்போம். "டொமினியன் என்பது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கிய ஒரு சுயேச்சை நாடு. இது மற்ற நாடுகளுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல. எல்லா நாடுகளும் மன்னருக்குப் பொதுப்படையான விசுவாசம் கொண்டவை; ஆனால் உள் நாட்டு விவகாரங்களில் ஒவ்வொன்றும் பூர்ணசுயேச்சை பெற்றது" என்று 1926-ல் வியாக்கியானம் செய்யப்பட்டது. இந்த வியாக்கியானத்தால் தெளிவாகாத அம்சங்கள் பலவிருந்தன. அவற்றைத் தெளிவாக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இக்கமிட்டி 1929-ல் கூடி 1930-ல் தனது முடிவுகளைத் தெரிவித்தது. அதன் பயனாய் வெஸ்ட்மினிஸ்டர் சாசனம் நிறைவேற்றப்பட்டது. டொமினியன் கொள்கை இவ்வாறு உருவெடுத்து வந்த காலத்திலேயே, அயர்லாந்து படிப்படியாக எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து, பெயரளவில்மட்டுமில்லாமல் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கும் தனி நாடாகிவிட்டது. அயர்லாந்து செய்ததென்ன? தென்னாப்ரிக்கா, தன்னை யூனியன் என்று அழைத்துக் கொண்டது; ஆஸ்திரேலியா, காமன்வெல்த் என்ற பெயரை ஏற்றுக்கொண்டு, எல்லா வழிகளிலும் தனது பூர்ண சுதந்திரத்தை நிலைநாட்ட முயன்றது. அயர்லாந்தும் முதலில் செனேட்டை ஒழித்தது; பின்னர் மன்னர் விசுவாசப் பிரமாணத்தைக் கைவிட்டது; பிரிவி கவுன்

ஸலுக்கு அப்பீல் செய்யும் வழக்கத்தை நிறுத்தியது ; பிறகு வைஸ்ராய் பதவியை ஒழித்தது ; கடைசியாக 30 ஆண்டுகளாகத் தந்துவந்த பென்ஷன்களையும் நிறுத்தியது. தனக்கென ஒரு சொந்தக் கொடியை ஏற்றுக் கொண்டது ; யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கப்போவதாகப் பிரகடனம் செய்தது ; ஜெர்மன் தோல்விக்குப் பின்னர், குடியரசு என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது. இந்தியாவின் கதியை நிர்ணயிக்க பிரிட்டன் இன்று வழங்கிவரும் சொற்றொடர்களின் உண்மை தாத்பரியம் என்ன என்பதை உணர்த்தவே, நாம் அயர்லாந்து முதலிய நாடுகளின் சரித்திரத்திலிருந்து மேற்கோள்கள் காட்டினேம். ஆனல், இந்தியாவோ, பூரண சுதந்திரமே தனது லக்ஷியம் என்று இறுதியாகக் கூறிவிட்டது.

"சம, சுதந்திர, பங்காளி அந்தஸ்து", நாம் கேட்கும், நமது பிறப்புரிமையான பூர்ண சுதந்திரத்தைத் தருமா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கானடா அல்லது ஆஸ்திரேலியா, அதிகாரப் பரப்பில் இங்கிலாந்துக்குத் தாழ்ந்தவை யென்ருலும் இங்கிலாந்துடன் சம அந்தஸ்து கொண்டவையே யென்று ஏமரி எண்ணலாம். அவ்வாறே இந்தியாவின் அந்தஸ்தும் பிரிட்டனுக்குச் சமமாயிருக்கும் என்றும் அவர் வாதாடலாம். ஆனல் இந்தியா மீது அவர் சுமத்த முயலும் பங்காளி அந்தஸ்தைப் பார்த்தால், அவர் செய்கைகள் அவர் வார்த்தையைப் பொய்ப்பிக்கும் என்றே தோன்றுகிறது. முதலில் சுதந்திரம் பெற்றபின்பே, இந்தியா எந்த நாடுடனும் கூட்டுறவு ஏற்படுத்துவதுபற்றி நினைக்க இடமுண்டு.

சர்வதேச அரசியல் ரீதியில் பிரிட்டனுடன் இந்தியா தொடர்பு கொள்ளக்கூடாது என்று காங்கிரஸ் சொன்னதில்லை. சுதந்திர, சம பங்காளியாகவேண்டுமானுல், முதலில் இந்தியா சுதந்திர நாடாகட்டும என்றுதான் காங்கிரஸ் கூறுகிறது. ஆகஸ்ட் தீர்மானத்தில் காங்கிரஸ் கூறியதும் அதுவே. பசப்பு வார்த்தைகளிலிருந்து சுதந்திரம் பிறந்துவிடாது. இந்திய சுதந்திரத்தைப் பிரிட்டன் தெளிவாகவும் உடனடியாகவும் பிரகடனம் செய்யவேண்டுமென்பதே காங்கிரஸின் அடிப்படையான கோரிக்கை. முதலில் சுதந்திரம் கிடைத்த பின்பு ஆயிரம் அந்தஸ்துகள் வரட்டும். பங்காளி அந்தஸ்து பற்றியெல்லாம் பின்னுல் பேசிக் கொள்ளலாம். இந்தியாவின் கடமை ஒன்றுதான். இன்றைய நிலைமையை உணர்ந்து சென்றகாலத்தின் சுமைகளோ, வருங்காலம்பற்றிய கவலைகளோ ஒன்றுமில்லாமல் பூர்ண சுதந்திர உணர்வுடன் போராட்டம் நடத்துவதே இந்தியாவின் கடமை. சர்வதேச அரசியலைப் பொறுத்தவரை, சுதந்திர நாடுகள் சம அந்தஸ்தில் ஒன்றுகூடி உருவாக்கும் உண்மையான சர்வ தேசிய அமைப்பில் சேர, சுதந்திர இந்தியா என்றும் சித்தமாயிருக்கும்.

---

Printed at the Sadhu Press, Royapettah, Madras,
Paper Issue Card No. M. S. 115
for Kadamım Publication, Madras,
Paper Issue Card No. M. S. 463—C. 1,000—25-1-46

6-3-67



# ஜோதி
# ஒரிஜினல் வைரங்கள்




தயாரிப்பவர்கள்

**K. அழகியமணவாளன் செட்டி & சே**

ஷராப் வியாபாரிகள் : திருச்சிராப்பள்


தென்னாட்டின்
உத்திரவாதமுள்ள
நகை வியாபாரிகள்
ஏ. ராஜு செட்டியார் & பிரத
கோயமுத்தூர்.
ராஜா.
தபால் பெட்டி : 139.
போன் : ௨௧௮